427

Reg. No. M. 1482.

ஸமரஸ போதினி.

"The Samarasabodhini"

"தெரிந்த வினத்தோடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க்
கரும் பொருள் யாதொன்றுமில்."

"எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார்
திண்ணியராகப் பெறின்."

E. சூரியநாராயண ஐயர் பி. ஏ., பி. எல்., பத்திராதிபர். E. Suryanarayana Aiyar B. A., B. L., *Editor*.

புத்தகம் 1. | ரௌத்திரி௵ ஆடி௴ ௱௩௨ புதன்கிழமை 28th July 1920. தஞ்சாவூர். | பிரதி 7.

ஸமரஸ போதினி.

இஃதொரு தமிழ் வாரப்பத்திரிகை. புதன்கிழமை தோறும் தஞ்சையினின்றும் வெளிவருவது. இந்தியர்கள் பிரிட்டிஷாரைப்போல் சுதந்தரமும் பூரணசுய ஆட்சியும் பெற்று உலகத்தார் கண் முன்பு சுகமாகவும் தைரியமாகவும் வாழவேண்டுமென்ற நோக்கத்துடன் இப்பத்திரிகை ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது. இதன் முக்கிய நோக்கம் காங்கிரஸை முழுமனதுடன் ஆதரிப்பதாகும். அரசியல், கல்வி, விவசாயம், தொழில், வியாபாரம், தொழிலாளர் இயக்கம் முதலிய விஷயங்கள் இப்பத்திரிகையில் நன்கு விவரிக்கப்படும். எளியவர்களும் இதை வாங்கிப் படிக்கவேண்டி இதன் சந்தாவைக் குறைத்து வைத்திருக்கிறோம்.

சந்தா விவரம்:—

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு	ரூ 5—0—0
ஆறுமாதங்களுககு	ரூ 3—0—0
பினாங்கு, சிங்கப்பூர், முதலிய விடங்களுக்கு	ரூ 7—0—0
ஆறுமாதங்களுக்கு	ரூ 4—0—0

விளம்பர விகிதம்:—

பத்தி 1க்கு மாதம் 1க்கு	ரூ 20—0—0
4 insertions per month per column	Rs. 20—0—0

3 மாதங்களுக்குக் குறையாமல் விளம்பரம் ஒப்பந்தம் செய்து கொள்பவர்களிடம் மிகவும் குறைந்த விகிதம் வாங்கப்படும்.

விஷயதானம் :— செய்பவர்கள் நல்ல வியாசங்களை ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக்கிழமை இவ்விடம் வந்து சேரும்படி எழுதி அனுப்பவேண்டும். எழுதுவோர் நல்ல காகிதத்தில் ஒரே பக்கத்தில் தனித்தனி எழுத்தாக எழுதி அனுப்பவேண்டும்.

நல்ல வியாஸங்கள் எழுதுவோருக்குத் தகுந்த கமிஷன் கொடுக்கப்படும். முழு விபரங்களுக்கு எழுதித் தெரிந்து கொள்ளவும்.

நாணயமும் நயமுமான

விடம்

ஒரு தடவை பரீக்ஷை செய்து பாருங்கள்.

ஓரியண்டல் வேர்ஹவுஸ் தஞ்சாவூர்

பட்டு அங்கவஸ்திரங்கள்.

பிரதிதினமும் தோய்க்கக் கூடியதும் நெடுநாள் உழைக்கக்கூடியதும் மிக அழுத்தமுமானது, முந்தாணை குஞ்சம் கட்டின பட்டு அங்கவஸ்திரங்கள். வெண்மை, சந்தனகலர், கோல்டு கலர், மேகவர்ணம், பச்சை, நீலம், ஆகாயம், சிவப்பு, ரோஸ், முதலான பல கலர்களில் கிடைக்கும். இவைகள் அங்கவஸ்திரங்களாகவும், டர்பனாகவும், உபயோகித்துக் கொள்ளலாம். விலை சரஸம்.

சாதா சேலைகள்.

காப்பிகலர் கோக்கோ கலர், டீக்கலர், காங்கு கலர்களில் ஒம்ரூல் சேலைகள், பூனமுந்தி சேலைகள், பிரதிதினமும் தோய்த்து உடுக்கக் கூடியது. நெடுநாள் உழைக்கக் கூடியது. கெட்டி சாயமுள்ளது.

ஜம்க்காளங்கள்.

சர்கூட் ஜம்க்காளங்கள் இங்கிலீஷ் பாட்டரன் கண்களை கவரக்கூடியது. மிக அழுத்தமானது.

பிடிக்காத தினுசுகள் வாபீஸ் பெற்றுக்கொண்டு வேறு தினுசுகள் அனுப்பிக் கொடுக்கப்படும். ஆகவே நேரில் பார்த்து வாங்க இல்லையென்ற எண்ணம் வேண்டாம்.

"வைசிய மித்திரன்."

இது காரைக்குடியினின்றும் வாரந்தோறும் அருமையான விஷயங்களுடன் ராயல்ஸைஸில் வெளிவரும் ஒரு வாராந்தத் தமிழ்ப் பத்திரிகையாகும். இது வியாபார விருத்திக் குரிய விஷயங்கள், கைத்தொழிற் குறிப்பு, விவசாயநுட்பம், விநோதக்குறிப்பு, அன்னிய வர்த்தமானம். பொது வர்த்தமானம், இராஜாங்க சமாசாரம், ஆகிய இவ்விஷயங்களுடன் வெளி வருகிறது. இந்திய மக்களுக்குப் "புதிய ஊக்கமும், செல்வப்பெருக்கம் வளருமாறு, பற்பல ஆராய்ச்சி வியாசங்கள், ராஜதந்திர நுட்பங்கள்" இவற்றை வெகு அழகாக எடுத்துப் போதித்து வருகின்ற இப்பத்திரிகையானது ஒவ்வொரு தமிழராலும் படிக்கத்தக்கதெனப் பல பத்திரிகைகளாலும் புகழப்படுகின்றது. இந்தியாவுக்கு வருட சந்தா ரூபாய் 5-0-0 (ரூபாய் ஐந்தே) வெளி நாடுகளுக்கு ரூபாய் 6-0-0.

மானேஜர்,
"வைசிய மித்திரன்" காரைக்குடி.

"The Young India."

A high class English weekly edited by Mahatma Ghandi. Only Rupees four per year. Oh! Sons & Daughters of Ind! Subscribe by thousands. In helping it you help yourselves.

The Manager,
Young India.
Ahmedabad.

தேவை.

சந்தாதாரர்களைச் சேர்க்கவும் விளம்பரங்களைச் சேகரிக்கவும் ஏஜண்டுகள் தேவை. தகுந்த கமிஷன் கொடுக்கப்படும்.

மாஜேனர்,
ஸமரஸ போதினி ஆபீஸ்,
தஞ்சாவூர்.

Kerosine Gas Stoves.

கியாஸ் அடுப்புகள்.

இதன் உபயோகம் அவசியமென்பது ஜனங்கள் அறிந்த விஷயம். தனி சாமான்களும் கிடைக்கும். கியாட்லாக் இனாம். ...ஸ்டவ் நெ. 5. ரூ 14-0-0.

ஸன் கம்பெனி,
தஞ்சாவூர்.

பெரியாரின் ஜீவிய சரிதம்.

திலகர் பெருமான்.

சென்ற 21-ந் தேதி போதினியின் 2-ம் பக்கத் தொடர்ச்சி)

XIII தாய்மகாராஜா வழக்கு.

‘ஆர்டிக்ஹோம்’ என்ற புஸ்தகத்தைத் திலகர் பெருமான் 1903ம் வருடம்மார்ச்சு மாதம் பிரசுரித்தனர். திலகரது புதிய நூல் உலகத்தினருக்கு வெளியாகு முன்னரே, பம்பாய் மாகாணவதிகாரிகளின் தூண்டுதலினல் இப்பெரியார்மேல் வேறொருவழக்குண்டாயது. 1901ம் ஆண்டு முதல் இந்த வியாச்சியத்தைக் முன்னிட்டுத் திலகர் பிரானுக்கு அளவற்ற திரவியச் செலவும் அலைச்சலும் தொந்திரவுமேற்பட்டதுடன் அச்சீரியோரின் அருமையான வாழ்நாளின் பெரும் பாகமும் வீணாய்க்கழியலாயிற்று.

பூனா நகரில் பாபா மஹாராஜாவென்ற பெரிய தனவந்தரொருவரிருந்தார். அவர் திலகருக்கு ஆருயிர்த்தோழர். இந்தச்சீமான் வாழ்ந்துவரும்நாளில், திடீரென்று வியாதிகண்டு 1897ம் வருஷம் ஆகஸ்டு மாதம் எழாந்தேதி உயிர்துறந்தார். பாபா மஹாராஜா இறப்பதற்குக் கொஞ்சநேரமுன்புதான், திலகர் பெருமான் அரசநிந்தனைக் குற்றவழக்கினின்றும் ஜாமீனில் விடுதலையடைந்து பூனாவிற்குவந்து சேர்ந்தனர். பிராணன் போகுந்தறுவாயில், திலகரைத் தம்மிடமழைத்துப் பாபா மஹாராஜா, தாம் எழுதிவைத்திருக்கும் மரண சாஸனத்தை நிறைவேற்றுபவராயிருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளத் திலகரும அவ்வாறே சம்மதித்தார்.

தட்சிண பீடபூமியிலுள்ள பெரிய வம்சங்களிலொன்றான பாபா மஹாராஜாவின் குடும்பத்தைச் சீர்திருத்திக் கடனின்றிச் செய்யவேண்டுமெனவும், அவரது நிரியாண சடங்குகளைக் குறைவற நடத்தும் பொருட்டும், முன் பாத்தியங்களில்லாத சொத்துக்களையாளும் பொருட்டும் ஒருபுத்திரனையவர் மனைவிக்குச் சுவீகாரமெடுத்துவைத்துத்தம் மேற்பார்வையில் அந்தப் பையனது கல்வி, குணம் முதலியவற்றைக் கவனித்துவரவேண்டுமென்றும் திலகர் பெருமான் தீர்மானித்தனர். சிறையினின்றும் வெளிவந்த பிறகு, திலகர்பிரான் கொஞ்சநாள் வரையில் இந்க்காரியத்தை யூன்றிப்பார்க்கமுடியவில்லை. இத்துறையில் இறங்கியவுடன், தாம் அக்குடும்பத்தில் நிறைவேற்றவேண்டிய சீர்திருத்தங்கள் இரண்டென்பதைத் திலகர் உணர்ந்தார். அநாவசியமான செலவைத் தவிர்த்துக் கடனடைப்பதும், மானிட வாழ்வு நித்தியமில்லாததாலும் அவ்வமயம் பூனா நகரில் பிளேக் வியாதி கடுமையாயிருந்ததாலும், காலஞ்சென்ற மஹாராஜாவின் காதலி தாய்மஹாராஜாவென்பவளுக்கு ஒரு பையனை ஸ்வீகாரமெடுத்துவைப்பதும் தம் முக்கிய கடமைகளெனத் திலகர்பிரான் நினைத்து, அதற்குரிய முறைகளை யனுசரிக்கலானார். தாய் மஹாராஜாவெனும் வாலிப விதவை திலகரின் நல்லெண்ணத்தை நன்குணர்ந்தவளாதலால், அவர் செய்யும் ஏற்பாடு தனக்கு நன்மை விளைக்குமென்று நிச்சயமாய் நம்பியிருந்தாள். ஏராளமான பணஞ் செலவழித்துத் தாய்மஹாராஜா ஆஸ்தியிற் சுகித்திருந்ததுபோலிருக்கத் திலகர் இடங்கொடுக்கவில்லை. இப்பெண்மணியை யண்டிப்பிழைத்து வந்தவர்களுக்குத் திலகர் பெருமானின் தீர்மானம்ஏமாற்றத்தை விளைவித்தது. அதனல், திலகர் மீது இப்பேடிகள் கோபமூண்டு, தாய்மஹாராஜாவிடஞ் சென்று அவள் ஜீவனும் சமடைந்த கைம்பெண்ணைப்பநடத்தப்பட்டு வருகின்றனளென்றும் பிறனொருவன் பிள்ளையாகவேற்பட்டால் ஏகாதிபத்திபத்துடன் வாழந்துவரும் அவளது நிலைமை குன்றிவிடுமென்றும் போதித்துவந்தனர். இதுவுமன்றி, தாய்மஹாராஜாவின் ஆப்தகார்வாரியொருவன் அவள் மனதைக் கலைத்து மாற்றானது அதிகாரத்துள் அவளிருப்பது கௌரவத்தாழ்வென்றோதி வந்தான். கோலாப்பூர் பண்டிதர் மஹாராஜாவும் நாக்பூர்க்கரும் ஒருங்குகூடித் தாய் மஹாராஜாவுக்குப் பண்டிதரின் சகோதரன் பாலமகாராஜாவைச் சுவீகாரப் புத்திரனாய்ச் செய்து விடுவதென்று ஆலோசனை செய்தார்கள். உலக அனுபவமில்லாத இளம் பெண்ணைத் தங்களெண்ணத்திற் கிணையும்படி அடிக்கடி வற்புறுத்தலாயினர். ஆனல் தாய் மஹாராஜாவாவது நாக்பூர்க்கராவது, திலகர், கபர்தே, முதலிய தர்மகர்த்தர்களை வெளிப்படையாய் எதிர்க்க முடியவில்லை. ஏனெனில், பாபா மஹாராஜாவின் பெண்டாட்டிக்குத்திலகர் சுயநலங்கருதாரென்றும் தன்நாயகன் குடும்பத்திற்குத் தீங்கிழைக்கக்கூடிய செய்கையைக் கைகொள்ளாரெனவும் நன்றாய்த் தெரியும். எக்காரணத்தைக்கொண்டும் திலகர், கபர்தேபோன்ற தர்மகர்த்தர்களுக்கும் தாய் மஹாராஜாவுக்கும் 1901ம் ஆண்டு சூன் மாதம் பதினெட்டாம் நாள் வரை, யாதொரு வபிப்பிராய பேதமும் உண்டாகவில்லை. அன்றையதினம், திலகர், கபர்தே, தாய்மஹாராஜா ஏனையோர், அரங்கபாத்துக்குச் சென்று, ஆங்கு மஹாராஜ வம்சத்துப் பாபர் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வாலிபனைத்திலகருங் கபர்தேயும் தாய்மஹாராஜாவுக்குச் சுவீகாரமெடுத்து வைத்தார்கள்.

அரங்கபாத்தினின்று திரும்பியதும், சூழ்ச்சி செய்வோரின் மாயவலையில் தாய் மஹாராஜா சிக்கிக்கொண்டாள். துன்மார்க்கர்களின் போதனையால், தன் கணவனெழுதிவைத்த மாணசாஸனப் பத்திரத்தை ரத்து செய்யவேண்டுமென்று பூனாவில் ஜில்லா நியாயாதிபதியாகிய ஆஸ்டன் முன்னிலையில் 1901ம் வருஷம் சூலை மாதம் இருபத்தொன்பதாந்தினம் மனு செய்துகொண்டாள்.

இவ்வழக்கின் விசாரணை அந்நாள் தொட்டு 1902ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மூன்றாந்தேதிமட்டும் தொடர்ந்தது. மொத்தம் முப்பத்துநான்கு ஈரங்கிகளேற்பட்டன. அவற்றில் திலகரின் குறுக்கு விசாரணை பதினான்கு தினங்களாயின. திலகர்பிரான் பன்முறை மறுத்துஞ் செவிகொடாது, ஆஸ்டன், வியாச்சியத்திற்கு எவ்விதத்திலும் சம்பந்தமில்லாத சாட்சியங்களை ஒப்புக்கொள்ளலாயினன். அரங்கபாத் சுவீகாரம் சட்டப்படி செல்லாதென்றும், திலகர், கபர்தே முதலியோருக்கு நிர்வாகபாத்தியமில்லையென்றும், திலகருங் கபர்தேயும் தங்கள் சொத்தைக்கொண்டு அவ்வழக்கில் மனுதாரருக்குண்டான செலவு தொகை முழுமையுங் கொடுக்கவேண்டுமென்றும் நீதி மன்றத்தில் ஆஸ்டனல் தீர்மானிக்கப்பட்டது. மேலும் அரங்கபாத்தில் ஒரு சிறிய அறையில் தாய் மஹாராஜா அடைபட்டிருந்தனளென்றும் பூனாவில் அவள் கொடுமையாய் நடத்தப்பட்டனளென்றும் அவளை ஏமாற்றிச் சுவீகாரஞ் செய்யப்பட்டதென்றும் மற்றுமநேக மோசங்கள் நடந்தனவென்றும் திலகர்மீது பழிசுமத்தினன்.

குதிரை கீழே தள்ளியதுமன்றிக் குழியையும் பறித்ததெனும் பழமொழிக்கேற்ப, ஆஸ்டன் திலகருக்கு விரோதமாக வழக்கைத் தீர்ப்புச்செய்ததுமன்றித் திலகர் பிரான் நாகபூர்க்கரை நம்பிக்கைத் துரோகஞ்செய்துவிட்டதாகப் பொய்ப்பிறுது கொடுத்தனரெனவும், வியாச்சியத்தில் சாட்சியமாய் உபயோகப்படுத்தும்பொருட்டு அரங்கபாத் பிரயாணத்தில் செலவிட்ட தொகைகளுக்குப் பொய்க்கணக்குத் தயாரித்தரெனவும், மேற்குறித்த காரியத்தில் கள்ளச்சாதன மெழுதினரெனவும், சுவீகாரப் பத்திரத்தில் தாய் மஹாராஜாவின் கையெழுத்துச் சம்பந்தமாய்ப் பொய்யென்றறிந்த சாட்சியத்தை உண்மையென்றனரெனவும், சுவீகாரப் பத்திரத்தை யுண்மையான சாட்சியம்போற் பிரயோசனப்படுத்தினரெனவும், தாய்மஹாராஜாவின் கையெழுத்திற்குமேல் தாம் இடையிலெழுதிய சுவீகாரப் பத்திரத்தைச் சுத்தமான வாக்குமூலமெனக் கையாண்டனரெனவும், அரங்கபாத் சுவீகாரத்தைக் குறித்தும் பூனாவில் தாய்மஹாராஜாவைக் காவலில் வைத்ததைப்பற்றியும் பால மஹாராஜாவைப பலாத்காரஞ்செய்தவிஷயமாகவும். மனச்சாட்சிக்கு விரோதமாகப் பொய்வாக்குமூலங்கொடுத்தனரெனவும் எழுவகை யபாண்டக் குற்றங்களைத் திலகர்மீது சுமத்திக் குற்ற விவகார முறைகளடங்கிய சட்டத்தின் 476-வது விதிப்படித் திலகர் விசாரணை நகரநீதிபதிமுன் நடக்கவேண்டுமென்றாக்ஞாபித்தான்.

இதல்லாமலும், ஊர்க்காவலருக்குத்திலகர் நெறிதவறின செய்தியளித்தாரென்றும் வஞ்சனைசெய்தனரென்றும் சட்டவிரோதமான கூட்டங்கூடினரென்றும் பொய்மொழிகள் வழங்கி, அவற்றைக் குறித்து அதிகாரிகள் ஆய்ந்தறிவதவசியமெனத் தன் தீர்மானத்தில் ஆஸ்டன் கூறியுள்ளான்.

திலகர் பெருமான் இத்தகைய முடிவை மாற்றவேண்டுமென ஐகோர்ட்டுக்குமுறைப்பாடு செய்துகொண்டார். தர்மகர்த்தராயிருக்கத் திலகருக்கு அதிகாரமில்லையென்று

நமது நேயர்களுக்கு.

நமது நேயர்கள் தங்களது சந்தாத் தொகைகளைக்காலதாமதமன்னியில் அனுப்பித்தரும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

(ப-ர்.)

ஸமரஸபோதினி, தஞ்சாவூர்.

ஸமரஸபோதினி

"Be just and fear not,
Let all the ends thou aimest at,
Be thy Country's, thy God's & Truth's"

ரௌத்திரி ஸூ ஆடி மீ ௰௩௨ புதன்கிழமை.

28th JULY 1920.

வழியொன்றுமில்லையோ?

புண்ணிய பூமியென்று பெயர் வழங்கி வரும் நமது இந்திய தேசம் தற்சமயம் கண்ணும் கண்ணீருமாகப் புலம்பிக்கொண்டிருப்பதைப் பார்க்க எவர் மனம்தான் தபிக்காது? உலகத்தில் நாகரிகம் வாய்ந்த எல்லாத்தேசத்தினர்களும் இந்தியர்கள் இச்சமயம் என்ன செய்யப்போகிறார்களோவென்று கவனித்து வருகிறார்கள். ஏன்? மகாயுத்தம் நடந்தபொழுது இந்தியர்கள் செய்த பரித்தியாகங்களும் வீரச்செயல்களும் உலகத்தினர்களெல்லோரையும் பிரமிக்கும்படி செய்துவிட்டன. அன்றியும், ஓர் நூற்றாண்டிற்கு மேல் பிரிடிஷாரின் ஆளுகைக்குட்பட்டிருக்கும் இந்தியர்கள் தங்கள் கஷ்டங்கள் நீங்காதிருந்தும், அக்கஷ்டங்களைச் சட்டை செய்யாமல் தங்களுடைய அரசர் பெருமானுக்கு நெருக்கடியான சமயத்தில் பூர்ண ராஜவிசுவாசத்தோடு உதவி செய்யலானார்கள். பிரான்ஸ், கீழ் ஆப்பிரிக்கா, பாலஸ்தீன் முதலியவிடங்களில் சண்டைப்போட்டுச் சத்துருவைத் தோற்கடித்து வெற்றிபெற்ற இந்தியர்களை உலகத்தார் கொண்டாடினார்கள். இந்தியாவில் ராணுவபலம் அதிகமாக இல்லாதிருந்த சமயத்திலும், சத்துருக்களின் சூழ்ச்சி பரவிக்கொண்டிருந்த காலத்திலும், அரசாங்கத்தார் மகா யுத்தத்தில் ஜெர்மனியார்களின் அபார பலத்தை எதிர்க்கமுடியாமல் இக்கட்டில் அகப்பட்டுக்கொண்டு தத்தளித்த சந்தர்ப்பத்திலும்கூட இந்தியர்கள் அமைதியோடும் சாவதானத்தோடுமிருந்து வந்தார்களென்பது உலகத்தார் அறிந்த விஷயம். சண்டைமுடிந்த பிறகு இந்தியாவில் நடந்த சம்பவங்களனைத்தையும் உலகத்தார் அறிந்திருப்பதால் இந்தியர்கள் என்ன செய்யப்போகிறார்கள் பார்ப்போம்? என்று ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிக்கிறார்கள்.

இந்தியர்கள் பல வருஷங்களாகக் கஷ்டப்பட்டுக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் தங்களுடைய ஆதி நிலையை நினைத்து நினைத்துத் துக்கிக்கிறார்கள். உலகத்தின் பல பாகங்களிலிருந்து அநேக ஜாதியினர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து வந்து ஏராளமான பொருள்களைக்கொண்டுபோனபோதிலும் இந்தியர்கள் தங்களது மனோதைரியத்தைவிடாமல் நல்ல காலத்தை எதிர்பார்த்து வந்தார்கள். அச்சமயம் கிழக்கு இந்தியா கம்பெனியார் வியாபார நிமித்தம் இந்தியாவிற்குவந்து சேர்ந்தார்கள். வந்தவர்களுக்கு முகலாய அரசர்கள் வேண்டிய வசதிகள் செய்து கொடுத்தார்கள். கம்பெனியார்கள் தங்களுடைய தேசத்திற்குத் தேவையான சாமான்களை வாங்கி அனுப்பினார்கள். கம்பெனியாருக்கு வியாபாரம் ஓங்கியது; செல்வம் பெருகியது செல்வாக்குண்டாகியது; கைக்கு இராஜ்ய பாரமும் கிடைத்தது; இந்தியர்களின் கைத்தொழிலும்வியாபாரமும் இருந்தவிடம் தெரியாமல்போயின. முடிவில்பிரிடிஷாரின் அதிகாரம் இந்தியாவில் ஸ்திரமாய் ஸ்தாபிக்கப்பட்டது.

அதிகாரம்பெற்ற பிரிடிஷார் தங்களது இனத்தாரைப் பெரிய உத்தியோகங்களில் அமர்த்திவைத்தனர்; அவர்களுக்கு ஆபிரக்கணக்கான ரூபாய் சம்பளமும் கொடுத்தனர். பெரும் சம்பளத்தைப்பெற்று வந்த அதிகாரிகள் தங்களது சுயநலத்தைப் பாராட்டியே ஆட்சிபுரிந்து வந்தார்கள். அவர்கள் ஜனங்களுக்குச் சாதகமாக ஏதோ சிற்சில நன்மைகள் செய்திருந்தாலும் தேசத்தின் முன்னேற்றத்திற்குத் தக்கதான வழிகளைத்தேடாமல் தங்களிஷ்டம்போல் அதிகாரம் செலுத்தலாயினர்.

தேசத்தில் வறுமை, பஞ்சம், பிணி, பெருநோய் முதலியவைகள் ஜனங்களைத் துன்பப்படுத்தலாயின. தாங்கமுடியாத வரிகள் விதிக்கப்பட்டுவந்தன. நியாய பரிபாலனத்திலும் வித்தியாசங்கள் பாராட்டப்பட்டும் வந்தன. ஜனங்களுக்குள் அதிருப்தி அதிகரித்துவந்தது. இதனிடையில் சிப்பாய்க்கலகம் நேர்ந்தது. அதினின்று பல கஷ்டங்களுண்டாயின. கடைசியில் கம்பெனியார்களின் ஆளுகை முடிவடைந்தது. மாட்சிமைதங்கிய விக்டோரியாமகாராணியார் இந்தியாவைநேரில் ஆளத்தலைப்பட்டனர். ஜனங்களின் உரிமைகளைப்பற்றியும், உத்தியோகங்களைப்பற்றியும் உறுதிமொழிகள் கூறப்பட்டன. அவ்வுறுதிமொழிகளின்படி சில நன்மைகள் செய்யப்பட்டன வேயன்றி முக்கியமான அம்சங்களில் ஜனங்கள் எதிர்பார்த்திருந்தவண்ணம் ஒன்றும் செய்யப்படவில்லை. இதனால் ஜனங்களுக்கு மனக்கொதிப்பு ஏற்பட்டது; தமது குறைகளை வெளியிட்டுச் சொல்ல ஆரம்பித்தனர். பலமான கிளர்ச்சியும் செய்தனர். இவையோடு ஜனங்கள் சும்மாவிருக்கவில்லை. அவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாருக்கும் இந்தியா மந்திரியவர்களுக்கும் விண்ணப்பம் செய்துகொண்டார்கள்; மீட்டிங்குகள் கூட்டிப்பலமாக ஆட்சேபித்துத் தீர்மானங்கள் செய்தார்கள். காங்கரஸ் சபைகூட்டித் தேச மகாஜனங்களின் அபிப்பிராயத்தை அறிந்து அவர்கள் தீர்மானங்கள்செய்து தலைவர்கள் மூலமாய்ப் போராடினார்கள். இங்கிலாந்திற்குச்சென்று பிரிடிஷ் மகாஜனங்களிடம் விஷயங்களைச் சொல்லி பரிகாரம் தேடலாமென்று தூதர்களையும் அனுப்பினார்கள். உத்தம தேசாபிமானிகளைக் கொண்டு சீமையில் பிரசார வேலையையும் செய்து பார்த்தார்கள். ஒன்றும் பிரயோஜனப்படவில்லை. விஷயம் பெரிதாயிருப்பினும் சரி, சிறிதாயிருப்பினும் சரி, அதிகாரவர்க்கத்தினர்கள் இந்தியர்கள் விஷயமென்றால் அலட்சியமாயிருந்து வந்தார்களென்று கூறுவது மிகையாகாது.

தேச மகாஜனங்களின் கிளர்ச்சியின் பயனாக அவ்வப்போது சில சீர்திருத்தங்கள் செய்யப்பட்டன. அவைகள்போதாவென்றும், ஜவாப்தாரியான ஆட்சிமுறை இந்தியாவில் ஏற்படவேண்டுமென்றும், அதிகாரவர்க்கத்தினர்கள் ஜனங்களின் வேலைக்காரர்களாயிருக்கவேண்டுமென்றும், ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணங்களை அவர்களின் நன்மைக்காகவே செலவிடவேண்டுமென்றும், அவ்விதம்செலவு செய்யும் விஷயத்தில் ஜனங்களுக்குப் பூராபாத்தியமிருக்கவேண்டுமென்றும், அடக்குமுறைச் சட்டங்கள் அடியோடு ஒழியவேண்டுமென்றும் இஷ்டம்போல் ராணுவச்சட்ட அமுல் நடைபெறக்கூடாதென்றும், பஞ்சாப்படுகொலை சம்பவங்கள் போல் இனி ஏற்படக்கூடாதென்றும், டயரைப்போல ஒருவர் உத்தியோகத்திலிருக்கக்கூடாதென்றும், அவர் ஜனங்களைக் காரணமன்னியில் சுட்டுக்கொன்றதுபோல் இனி ஒருவரும் சுடாமலிருக்கவேண்டுமென்றும், அந்த டயரைத் தண்டிக்காமல் விட்டுவிடக்கூடாதென்றும், டயரின் செய்கையை அங்கீகரித்து மெச்சின உத்தியோகஸ்தர்களைத் தகுந்தபடி சிட்சை செய்யாமல் சும்மாவிட்டுவிடுவது அநீதியாகுமென்றும், இனி இந்திய ஜனங்களுக்குக் கவர்ன்மெண்டாரிடத்தில் பூர்ண நம்பிக்கையுண்டாகுமாறு அவர்களின்ஜீவாதாரமான பிறப்புரிமைகளடங்கிய ஒரு சட்டம் உடனே ஏற்படவேண்டுமென்றும், புதிய சீர்திருத்த சட்டம் போதாதென்றும், அதன் சம்பந்தமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிற விதிகள் சட்டத்தில் கொடுபட்டிருக்கும் சில பாத்தியங்களைப்பயனற்றவைகளாகச்செய்துவிடுகின்றனவென்றும், ஏழுகோடிஜனங்களாகிய முகமதியர்களை லட்சியம் செய்யாமலும் அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றாமலும் அவர்களின் மதக்கொள்கைக்கு விரோதமாக அவர்கள் கலீபாவின் அதிகாரத்தையும், அந்தஸ்தையும் குறைக்கக்கூடாதென்றும் பொதுஜன மீட்டிங்குகளிலும், கான்பரன்ஸ்களிலும், காங்கரஸ் மகாசபையிலும் தீர்மானங்கள்செய்து அனுப்பியும் மன்றாடிக் கேட்டுக்கொண்டும்

பெரிய நியாயஸ்தலமாகக் கருதப்பட்டுவரும் பார்லிமெண்டிலும் யாதொரு பிரயோஜனமும் ஏற்படவில்லையே என்று தேசமகாஜனங்கள் துக்கசாகரத்தில் மூழ்கிக்கிடக்கிறார்கள்.

எங்குப் பார்த்தபோதிலும், பெரிய பட்டணங்களிலும், கிராமங்களிலும், படித்தவர்களும் படிக்காதவர்களும் "பார்லிமெண்டார்கள் நம்மைக்கைவிட்டு விட்டார்களே! இஃதென்ன விபரீதகாலம்! நியாயம் எங்கேபோயிற்று? தர்மம் உலகத்தில் இல்லையா? ஸத்யத்தையும் தர்மத்தையும் நிலைநாட்டவே இந்த மகாயுத்தத்தில் பிரவேசித்தோம் என்று பறையடித்தவர்கள் பேச்சு பொய்யோ? இஃதென்ன அதிசயம். கலியுகத்தின் கொடுமை இதுதானோவென்று சொல்லிக்கொண்டு ஹே! ஜகதீசா! அநாதரக்ஷகா! ஆபத் பாந்தவா! வழியொன்றுமில்லையா" வென்று ஸ்திரீ புருஷர்களெல்லோரும் புலம்புவதைக் கேட்க எவர் மனம்தான் பதறாது.?

ஆனால் வழியொன்று இருப்பதாகப்பெரியோர்கள் சொல்லுகிறார்கள். அது ஒற்றுமையாமை என்னும் புதியகொள்கையாகும். அவ்வழியைப்பின்பற்றினால் விசேஷமான பரித்தியாகங்கள் செய்யவேண்டிவருமென்றும் அதன் வழியாய் காரியசித்தியை அடையலாமென்றும் கூறுகிறார்கள். மகாத்மாகாந்தியடிகள் ஜனங்கள் அவ்வழியைபின்பற்றினாலன்றிக்கதி மோட்சம்கிடையாதென்று தெளிவாய் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் மற்ற தலைவர்களும் தேச மகாஜனங்களுள் பெரும் பான்மையோரும் விசேஷ காங்கரஸும் அகில இந்தியா முஸ்லிம் லீகும் தீர ஆலோசித்துக் கட்டளையிடும் வரையிலும் பொறுத்திருக்கவேண்டுமென்று அபிப்பிராயப் படுகிறார்களெனத் தெரியவருகிறது. காங்கரஸின் தீர்மானத்தை ஜனங்கள் ஆவலோடு எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள்.

சுதேசியம் அனுஷ்டிக்கும் விதம்

அது நிற்க, மற்றொருவழியாகவும் நம் காரியத்தைச்சாதித்துக்கொள்ளலாம். அதாவது அந்நியர்களின் சகாயத்தைத் தேடாமலும், அந்நியர்களையே நம்பியிராமலும் நம்முள்ளிருக்கும் அபார சக்தியைக்கடைப்பிடிப்பதேயாகும். அந்தச் சக்தியை வெளிக்கிளப்பி நம் காரியத்தைக் கைகூடும்படிசெய்ய வேண்டுமானால் ஒரு தேவதையை உபாசிக்கவேண்டும். அந்தத்தேவதைதான் பாரதமாதா. உபாசனைக்கு மந்திரம்வேண்டும். அதுதான் சுதேசியம். சுதேசியப், என்னும் விரதத்தை நாம் பூரணபக்தியோடு அநுஷ்டிக்கவேண்டும். அரைகுறையாக அனுஷ்டித்து விபரீதத்தை உண்டுபண்ணிக்கொள்ளக்கூடாது. முன்னர் ஒரு சமயம் இதை அனுஷ்டித்து, நடுவில் விட்டுவிட்டபடியால் மகத்தான கஷ்டங்கள் விளைந்திருக்கின்றன. பாரதமாதா இனிசகிக்கமாட்டாள். பயபக்தியோடும், திடமனத்தோடும் நாம் இந்தச் சுதேசியம் என்னும் விரதத்தைக் கைக்கொள்ளவேண்டும். வழிகட்டாயம் பிறக்கும்.

சுதேசியம் எனும் மந்திரத்திற்குப்பீஜாட்சரம் "சுய ஆட்சி" இதைஉபதேசிக்கும் ருஷி மகாத்மா காந்தியவர்கள். இம்மந்திரத்தை எவரும், எக்காலத்திலும், எந்தப்பாஷையிலும் உச்சரிக்கலாம். இதை ஒவ்வொருவரும் கீழ்க்கண்டபடி உச்சரிக்கவேண்டும். இதற்குக் காலதேச வர்த்தமானம் கிடையாது. ஜாதிமதக்கட்டுப் பாடுமில்லை.

த்யானமுறை. ஹே! பாரததேவி! எனக்குத் தேசபக்தி புகட்டுவாயாக! என்னையும் என் நாட்டிலுள்ள சகோதர சகோதரிகளையும் இவ்விரதத்தை அனுஷ்டிக்குமாறு ஊக்கத்தையுண்டுபண்ணுவாயாக. உன் தேசத்தில் விளையும் பருத்தியை உன் மக்கள் கைத்தறிகளைக் கொண்டு நூலாகத்திரித்துத் துணிகள் செய்துடுத்தும்படி நல்ல புத்தியையும் சக்தியையும் அவர்களுக்கு உண்டுபண்ணுவாயாக.

வீட்டுக்கு வீடு தறிகள் வைத்துக்கொண்டுஸ்திரீ புருஷர்கள் நூல் நூற்று துணிகள்செய்து உனது பூஜை செய்யுமாறுஆசீர்வதிப்பாயாக! உன் குழந்தைகள் உன் நாட்டில் செய்யப்படும் மோட்டாதுணிகளையே உபயோகிக்கும் படியான உறுதியான புத்தியைத் தருவாயாக! உன் நாட்டினின்று வெளியேபோகும் கோடிக்கணக்கான ரூபாய்களைப் போகாவண்ணம் தடுப்பாயாக! என்ன கஷ்டங்கள் நேரினும் என்ன அசௌக்கியங்கள் உண்டாயினும், அவைகளெல்லாவற்றையும் பொருட்படுத்தாமல் சந்தோஷத்தோடு உனது சேவை செய்யுமாறு அவர்களை ஆசீர்வதிப்பாயாக! உனது நாட்டில் முன்போல வெகு நேர்த்தியான பருத்திவிளையுமாறு பூசாரம் அளிப்பாயாக! கைத்தறிகளைக்கொண்டு செய்யப்படும் துணிகள் மேல்மேலும் விருத்தியாகிக்கொண்டே வருமாறு அனுக்கிரகம் செய்வாயாக!

பலன். இவ்விரதத்தை உறுதியோடு அனுஷ்டிக்கும் ஒவ்வொருவரும் சுகத்தோடும் சந்தோஷத்தோடும் வாழ்வார். இவ்வனுஷ்டானம் செய்துவந்தால் இந்தியா தேசம் மேலோங்கும். தேசத்தனின்று வறுமை ஒழியும்; கோடிக்கணக்கானஜனங்களுக்கு வயிறுநிரம்ப சாப்பிடவழி ஏற்படும் பிரிட்டிஷ் மகாஜனங்கள் இந்தியர்களைக் கௌரவத்தோடும் கண்ணியத்தோடும் நடத்துவர். பார்லிமெண்டார் நம் கோரிக்கைகளுக்கிணங்குவர். இந்தியர்கள் ஆங்கிலேயரோடு சரிசமானமான அந்தஸ்தில் வைக்கப்படுவர். ஆகையால் எமது நண்பர்களே! பாரத புத்திரர்களே! இவ்விரதத்தை உடனே அனுஷ்டியங்கள். பரித்தியாகம் செய்யுங்கள். பாரதமாதாவின் இஷ்டத்தைப் பூர்த்திசெய்யுங்கள். வந்தேமாதரம்.

இடை நிகழ்வு விளக்கு.

திலகர் பெருமான்

நமது பத்திரிகை இன்று அச்சேறுவதற்கு முன்பு திலகர் பெருமான் அதிஜுரத்தால வருந்துகிறாரென்றும் அவரது தேகநிலை கவலைக்கிடமாயிருக்கிறதென்றும் பம்பாயினின்றும் வந்த செய்தியால் மனம் திடுக்கிட்டு விசனிக்கிறோம். பம்பாய் வாசியான மிஸடர் ஜம்னதாஸ் தாம் திலகரைப் போய்ப் பார்த்து வந்ததாகவும் அவரது தேகம் அபாயகரமாக இருப்பதாகவும் ஸ்ரீ அன்னி பெஸண்டுக்குத் தந்தியடித்திருக்கிறார். இச்செய்தியைக் கேட்ட இந்தியஸ்திரி புருஷர்களெல்லோரும் அவர் கொடிய சத்துருக்கள் உள்படமனவருத்த மடைவார்களென்பது நிச்சயம். திலகரைப் போன்ற தலைவர் சிரேஷ்டர் நம் தேசத்துக்குக் கிடைப்பது அரிதாகையால், அவர் இன்னும் நீண்டகாலம் சுகமாக வாழ்ந்து தேசசேவைசெய்யக்கடவுள் அனுக்கிரகம்செய்வரென்று நாம் பிரார்த்திக்கின்றோம். தேசத்தின் நெருக்கடியான சமயத்தில் திலகரது யோசனையும் ஆதரவும் வேண்டியிருப்பதால் கோயில் களிலும் மசூதிகளிலும் மாதாகோயில்களிலும் அவரது தேகம் குணப்படுவதற்குத் தேசபக்தர்கள் தொழுவார்களென்று நம்புகிறோம்.

கண்ணம்பாடி அணைக்கட்டு

தஞ்சை ஜில்லா நிலச்சுவான்தார்கள் கண்ணம்பாடி அணைக்கட்டு விஷயத்தைப் பற்றிக் கவனியாமல் தூங்கி வருகிறார்களென்று சொல்லப்படுகிறது. இவ்வாறு சொல்லப் படுவதில் கொஞ்சம் உண்மையில்லாமற் போகவில்லை. ஆரம்பத்தில் கொஞ்சம் சுறுசுறுப்பு காண்பித்த பிரமுகர்கள் இப்போது எங்குப் போயிருக்கிறார்களோ? தெரியவில்லை. முன்னர் செய்யப்பட்ட தீர்ப்பு ஒப்புக்கொள்ளப்படாமல் மறுபடியும் கண்ணம்படி அணைக்கட்டு விஷயம் புதிய தீர்ப்புக்கு அனுப்பப்பட்டிருப்பதால் தஞ்சை ஜில்லா மிராசுதார்கள், ராவ்பதூர் கே. எஸ். வேங்கட்டராமயர் சொல்லுவது போல், இதுசமயம் தூங்காமல் விழித்துக் கொண்டு கிளர்ச்சிசெய்வது அவசியமாகும். இவ்விஷயம் மகாசிக்கலானபடியால், இப்பொழுதே ஒரு தகுந்த வக்கிலைத் திட்டம்செய்து அவரைக் கொண்டு இது சம்பந்தமானவைகளைக் கவனிக்கும்படி செய்வது முக்கியமாகும். தஞ்சைஜில்லாநிலச்சுவான்தார்கள் தங்களுடைய பிற்கால க்ஷேமத்தை உத்தேசித்தேனும் தங்களுக்குள் சில பிரதிநிதிகளைத்தெரிந்தெடுத்துடன் முதல் கவர்னரைப் பேட்டிகாணுவது நல்லதென்று நாம் அபிப்பிராயப்படுகிறோம். இந்த ஜில்லா நிலச்சுவான்தார்களின் பிரதிநிதியாகச், சட்டசபையில் உட்காரும் கனம் மிஸ்டர் டி. ஆர். இரமசந்திர ஐயர்வனே மௌனம் சாதித்து வருகிறார்?

கலியாணசுந்தரம் ஹைஸ்கூல்.

சுமார் முப்பது வருஷங்களாக இத் தஞ்சைமா நகரில் நடைபெற்றுவரும் கலியாண சுந்தரம் ஹைஸ்கூல் இந்த ஜில்லாவில் பேர்போனதென்பதை நேயர்கள் அறிவார்கள். இந்த ஹைஸ்கூலைக் கல்வி இன்ஸ்பெக்டர் மிஸ்டர் பி. ஆர். ராகவாச்சாரியார் (கவர்னர் நிர்வாகசபை மெம்பர் திவான்பகதூர் பி. இராஜகோபாலாச்சாரியார் குமாரர்) இந்த வாரம் பார்வையிட்டதாகவும், அவர் ஸ்கூல் நிர்வாகத்தையும், உபாத்தியாயர்களின் போதனாசக்தியையும் கண்டு திருப்தியடைந்ததாகவும் கேட்டு நாம் சந்தோஷப்படுகிறோம். ஆனால் அவர் உபாத்தியாயர்களின் சம்பள நிலையைப்பற்றி மானேஜரிடம் பேசிக்கொண்டிருந்தபோது, உபாத்தியாயர்களுக்குக் கொடுக்கப்படும்சம்பளம்மிகவும் குறைவென்றும் மற்ற ஹைஸ்கூல்களில் சம்பளம் அதிகமாகக் கொடுக்கப்படுகிறதென்றும், உணவுப்பொருள்களும் வாழ்க்கைக்குவேண்டிய மற்றப் பொருள்களும் அதிகமாக விலைக்கு விற்கப்படும் போது காலநிலையை உத்தேசித்துச் சம்பளம் உயர்த்தப்படுவது அவசியமென்றும் வற்புறுத்தியதாக அறிகிறோம். இஃதுண்மையானால், மிஸ்டர் வி. பி. ஆர். ராகவாச்சாரியரின் கருணையையும் உபாத்தியாயர்கள் சம்பள விஷயமாகஅவர் எடுத்துக்கொண்டசிரத்தையையும் நாம் பாராட்டுகிறோம். மானேஜர் மிஸ்டர் கே. இராமானுஜஐய்யங்கார் ஸ்கூலுக்கு அதிகப் பணமில்லையென்று பதிலளித்ததாகக்கேள்விப்படுகிறோம். ஸ்கூலின்பணநிலையை அபிவிருத்தி செய்வதற்கு முயற்சிகள் செய்யப்படவேண்டுமேயன்றி அதன் பொருட்டு இந்த அகவிலை காலத்தில் உபாத்தியாயர்களின் சம்பளத்தை உயர்த்தாதிருப்பதானது விசனிக்கக்கூடியதென்றே நாம் கூறவேண்டும். மானேஜர் அவர்கள் ஏழை உபாத்தியாயர்களின் நிலைமையைக் கவனித்து அவர்களுக்கு ஊக்கம் குறையாமல் ஏற்பாடு செய்வார்களாக. எங்கும் கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களும் தொழிலாளர்களும் தங்களுக்கென ஒரு சங்கம் ஏற்படுத்திக்கொண்டு அவரவர்களுடைய நிலையை உயர்த்திக்கொள்ளும் இக்காலத்தில் கலியாணசுந்தரம் ஹைஸ்கூல் உபாத்தியாயர்கள் காலப்போக்கை அனுசரியாது வாளா காலங்கழிப்பது ஆச்சரியமாகவிருக்கிறது. அவர்கள் இனியேனும் விழித்துக் கொள்வார்களோ?.

அதிகாரிகளின் மனப்பான்மை

டெல்லி அதிகாரிகளின் மனப்பான்மையை நாம் பாராட்டமுடியவில்லை. அவர்கள் டெல்லிப் பொது ஜனங்களின் மனது நோகும்படி ஏதேனுமொரு காரியத்தைச் செய்துகொண்டு வருகிறார்கள். இராஜத்துரோகக் கூட்டசட்டம் மூன்று மாதகாலம் டெல்லி நகரில் அமுலிலிருக்க வேண்டுமென்று முன்னர் அதிகாரிகள் பகிரங்கம் செய்ததை நம் சகோதரர்கள் அறிவார்கள். அந்த உத்தரவு இன்றோடு முடிவாகிறது. இன்று வந்த செய்திபால், அதிகாரிகள். அந்த உத்தரவு இன்னுமொரு மூன்று மாதகாலம் அமுலிலிருக்குமென்று பகிரங்கம் செய்திருப்பதாகத் தெரிகிறது. இதற்குக்காரணம் தெரியவில்லை. டெல்லி சுய ஆட்சி சங்கக் காரியதரிசி மிஸ்டர் சங்கர்லாலும் கிலாபத் பிரசார சங்கத்தின் காரியதரிசி மௌலானா அரிப் ஹஸ் என்பவரும் மகாத்மா காந்திக்குத் தந்தியடித்து அதில் "இராஜத்துரோகக் கூட்ட சட்டம் ஜூலை மாதம் 28ந்தேதியினின்று டெல்லியில் மூன்று மாத காலம் நீடித்திருக்கும்படி அதிகாரிகள் உத்தரவு செய்திருக்கிறார்களென்றும் இவ்வுத்தரவு சகிக்கமுடியாததாகவும் அநீதியாகவுமிருக்கிறதென்றும் அவமானம் தரத்தக்கதென்றும். உத்தரவை மீறி நடந்து சத்தியாக்கிரகத்தைக் கைக்கொள்ள நீங்கள் அனுமதிகொடுக்க வேண்டுமென்றும்" குறிப்பிட்டிருக்கிறார்கள். இவர்களுடைய தந்திக்கு மகாத்மா காந்தி என்ன பதிலளிப்பரோ? இங்ஙனம் டெல்லி அதிகாரிகள் கண்மூடித்தனமாக ராஜவிசுவாசமுள்ள ஜனங்களின் மீது அவநம்பிக்கை கொண்டு முட்டாள் உத்தரவினால் அவர்களைப்பய முறுத்துவதானது குரூரமானதாகும். இவ்வாறு அதிகார வர்க்கத்தினர்கள் ஜனங்களை நம்பாமலிருந்தால், ஜனங்கள் அவர்கள் மீது எப்படி நல்லெண்ணம் கொள்வார்கள்?

எப்போதுதான் அறிவார்களோ?

ஒருவர் பிரசங்கம் செய்யும்போது, அவரைப் பேசவிடாமல் கைதட்டுவதும், கூச்சல் போட்டுப் பரிகாசம் செய்வதும், "வெட்கம், வெட்கம்" என்று கத்துவதும் அஸம்பாவிதமாகுமென்று யாவரும் ஒப்புக்கொள்வார். இம்மாதம் 25ந்தேதி கனம் வி. எஸ். ஸ்ரீவாஸசாஸ்திரியார் கும்பகோணம் போர்ட்டர் டவுன் ஹாலில் ஒரு பிரசங்கம் செய்தபோது, பிரசங்கத்திற்கு வந்திருந்தவர்களில் சிலர் அவரைப் பலதடவைப்பேசவொட்டாமல்செய்து சபையில்மிகவும் கேவலமாக நடந்து கொண்டார்களென்று கேள்விப்படுகிறோம். இவ்வாறு ஒருதலைவர் எந்தக்கட்சியைச் சேர்ந்தவரானாலும் சரி, எக்கொள்கையையுடையவரானாலும் சரி, அவர் பேசும்போது அவமானம செய்தலை நாம் முழுமனதுடன் கண்டிப்பதோடு அருவருக்கிறோம். தமிழ் ஜில்லாக்களில் ஆங்காங்கு நடைபெறும் கூட்டங்களில் முக்கியமாக தேசீயக்கட்சியைச் சேர்ந்தவர்களில் சிலர்இவ்விதம்இழிவானசெயலைச்செய்கிறார்களென்று அறிகிறோம். ஒருவர் பேசும்போது ஆட்சேபமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டால்; அவைகளைப்பற்றி அவர் பேசிமுடிந்தபிறகு ஆதரித்தோ நிராகரித்தோ பேசுவதுதான் ஒழுங்கு. இவ்வொழுங்கு முறையைக் கையாளாமலிருந்தால் இந்தியர்கள் பிறரால் ஏசப்படுவார்களென்று அஞ்சுகிறோம்.

லாலாலஜபதிராய்.

இப்பெரியார் விசேஷ காங்கரஸுக்கு அக்கிராசனராகத் தெரிந்தெடுக்கப்பட்ட செய்தியைக் கேட்டு நாம் சந்தோஷப்படுகிறோம். திலகர் பெருமான் தெரிந்தெடுக்கப்படவேண்டுமென்று நாம் எழுதியிருந்தோம். எனினும், லாலாலஜபதிராய் தெரிந்தெடுக்கப்பட்டது பற்றி நாம் மனச்சோர்வடையவில்லை. லாலா அவர்கள் விசேஷ காங்கரஸுக்கு எவ்விதத்திலும் தகுதியுடையவர். நம்தேசத்தின் நெருக்கடியையும் உலக அரசியல் நிலையையும் நன்கறிந்தவராதலால் இவரது அக்கிராசனத்தின்கீழ் கிலாபத் விஷயம், ஒத்துழையாமை விஷயம் நன்கு ஆலோசிக்கப்பட்டு முடிவு செய்யப்படுமென்று நம்புகிறோம். காங்கரஸ் விஷயாலோசனைக் கமிட்டியில் மெம்பர்கள் கோபதாபத்துக்கு இடங்கொடாமல் தேசத்தின் நெருக்கடியான நிலையைப்பற்றி வாதம் செய்தலவசியமாகுமென்பதை நாம் அறிவித்துக்கொள்கிறோம்.

?

இஃதென்ன? இதுதான் பிரிட்டிஷ் நீதியோ? வென்று நாம் கேட்கிறோம். சமீபத்தில் லார்டு சபையில் ஜெனரல் டயர் சம்பந்தமான வாதத்தின் போக்கையும் அச்சபையினர் தீர்மானம் செய்ததையும் பார்த்தபிறகு உலகத்தில் முக்கியமாகப் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தில் அதுவும் இந்தியாவில் பிரிட்டிஷ் நீதிபோன்றிருக்கிறதோ? வென இந்தியர்கள் வினவுகிறார்கள். இப்போது அது எங்குப்போயிற்றென்று? நாம் அறிய ஆவலுடையவர்களாயிருக்கிறோம். ஏகாதிபத்தியப் பெருக்குக்கு அஃதொருகால் இடைஞ்சலாயிருக்கிறதென்று லார்டு சபையினர் நினைத்திருக்கின்றனரோ? அல்லது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் போக்கு இனி பிரிட்டிஷ் நீதி வழிபற்றியிராதென்று ரூபிக்க லார்டு சபையினர் இந்தியர்களுக்கு ஒரு சூசனை காண்பித்தனரோ? இன்னுமல்லாது பணத்திமிராலும் இராணுவக் கொழுப்பாலும் மெய் மறந்து பிரிட்டிஷ் நீதி இந்தியர்களுக்கு வழங்கப்படாதென்று லார்டு சபையினர் தீர்மானித்தனரோ? வேறு எந்தக் காரணத்தால் பிரிட்டிஷ் நீதி இந்தியர்களுக்கு வழங்கப்படவில்லை?

இனி ஆட்சி முறை எவ்விதமோ?

எல்லோராலும் கொண்டாடப்படும் பிரிட்டிஷ் நீதியைப் புறக்கணித்துவிட்டு லார்டு சபையினர் ஜலியன் வாலா பாக்கில் டயர் செய்த செயல் சரியென்று தீர்மானம் செய்து அவனைப்புகழ்ந்தது இந்தியர்களுக்கு வயிறு எரிகிறது; மனம் பதைக்கிறது; தேகம் நடுங்கிறது. என்செய்வது? ஜலியன் வாலா பாக்கில் நூற்றுக்கணக்கான பேர்களைக் கொன்று கர்யம்படுத்திய கொலைபாதகனை, பதிவிரதாஸ்திரீமணிகளை வயிறு பதைக்கச்செய்த ராட்சஸனை, குழந்தைகளென்று பாராமல் ஜலியன் வாலா பாக்கில் அவர்களைச் சுட்டு வீழ்த்திய கொடியனை சுடுவதைக்கண்டு பயந்தோடியவர்களைக் குறி பார்த்துச் சுட்டவெறியனை, படுகாயம் பட்டு அலறுகிறவர்களுக்கு வைத்திய உதவி

செய்ய ஏற்பாடு செய்யாமலிருந்த இரக்கமற்றவனை, முப்பத்துமூன்று கோடி ஜனங்கள் சாபத்துக்கு ஆளான பாவியை, பிரிட்டிஷ் தருமத்துக்குக் கேடு சூழ்ந்த மகா சண்டாளனை, பிரிட்டிஷாருக்கும், இந்தியர்களுக்குமுள்ள சினேக பாவத்தைக் கெடுக்க வந்த மித்திரத் துரோகியை லார்டு சபையினர் பிரிட்டிஷ் நீதிக்கும் தருமத்திற்கும் மாறாக ஆதரித்தது என்ன நியாயமோ? என்ன தருமமோ? இந்தியர்கள் அறியார்கள். யுத்தகாலத்தில் சத்துருதேசமாயிருந்த பல்ஜியத்தின் மீது படையெடுத்து ஜெர்மானியர்கள் செய்த ஒவ்வொரு செயலையும் கண்டித்து யுத்தம்முடிந்தபிறகு யுத்தக்குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டுமென்று தாண்டிக்குதித்த பிரிட்டிஷார், பஞ்சாபில் நிரபராதிகளை, நிராயுதபாணிகளை, ராஜவிசுவாஸிகளை, ஆபத்தில் உதவிபுரிந்தோர்களை பிரிட்டிஷ் ஆட்சி நீடித்திருக்கவேண்டுமென்று கோயில்களிலும் மசூதிகளிலும் மாதாகோயில்களிலும் தொழுது பிரார்த்தனைகள் செய்தோர்களை ஈவு இரக்கமின்றி ஜலியன் வாலாபாக்கில் சுட்டுத்தள்ளியதற்கு என்ன பரிகாரம் செய்யப்போகின்றனர்? பார்லிமெண்டில் மிஸ்டர் மாண்டேகு கூறியது போல், பிரிட்டிஷார் தம்பலத்தைக்கொண்டு இந்தியர்களைப் பயமுறுத்தி ஆட்சிபுரிய உத்தேசித்திருக்கின்றனரா? வென்று நாம் கேட்கிறோம். இனி இந்தியாவின் ஆட்சி முறை எவ்விதமோ?

உலகப்போக்கு.

ஜில்லா.

இம்மாதம் 21ந்தேதி மாஜி டிப்டிகலெக்டர் மிஸ்டர் டி. என். இராமச்சந்திரஐயர் அக்கிராசனத்தின் கீழ் கலியாண சுந்தரம் ஹைஸ்கூல் ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் கூடியது. அப்போது கீழ்க்கண்ட தீர்மானங்கள் செய்யபபட்டன:—

1. சமீபத்தில் நடந்த எஸ். எஸ். எல். ஸி. பரீக்ஷையில், ஆங்கிலேய தேச சரிதபாடமும், தாய் பாஷையும் எடுத்துக் கொண்டமாணவர்கள் பேபர்களைச்சரிவர திருத்தாததினால் ஏராளமாக அவர்கள் தேறவில்லையென்றும்

2. ஸப்ளிமெண்டரி கோர்ஸ் வாசிக்கும் மாணவர்கள் காலேஜுக்குப் போக எல்லாப் பாடங்களையும் வாசிக்க வேண்டியதற்குப்பதிலாக இண்டர்மிடீயேட் பரீக்ஷையிலும் பீ. ஏ. பரீக்ஷையிலும் வாசிக்கும் மாணவர்களுக்குள்ள சௌகரியங்களை எஸ் எஸ். எல். ஸி. மாணவர்களுக்கும் கொடுக்கவேண்டுமென்றும் மேலே சொன்ன தீர்மானங்களைச் சென்னைச்சர்வகலாசாலை வைஸ் சான்ஸலர் கவனித்துச் சௌகரியங்களைச் செய்யவேண்டுமென்று கோருவதாகவும் இத்தீர்மானங்களின் நகல்களை கல்வி இலாகா தலைவருக்கும், வைஸ் சான்ஸலருக்கும் பேபர்களுக்கும், அனுப்ப வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டன.

* *

தஞ்சையில் சென்ற வியாழக்கிழமை மாலை மேலவீதி வக்கீல் ஸ்ரீமான் பஞ்சாபகேசஅய்யர் அவர்களின் வீட்டுக் கூறையும்மாடியும் தீப்பற்றிக் கொண்டன. அதிக சேதமும், நஷ்டமும் உண்டாயிற்றென்று தெரிய வருகின்றது. இத்துடனிராமல் அக்கினி பகவான் அடுத்த கடையின் மாடிக் கூறைக்கும் விஜயம் செய்தார். அங்கும் சேதமுண்டாயிற்று. இதற்குக் காரணம் சிறு பையன்கள் வாணங்கள் கொளுத்தி விளையாடினதாகுமென்று சொல்லப்படுகிறது.

* *

தஞ்சையில் சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் அ. ரங்கசாமி அய்யங்கார் அவர்கள் விஜயம் செய்திருக்கின்றார். இவர் நேற்று திருவாதிக்குச் சென்று அங்கு ஓர் பிரசங்கம் செய்தார். இன்று கும்பகோணத்திற்குச் சென்றிருக்கிறார். நாளை இவ்விடம் மறுபடியும் விஜயஞ் செய்து சில நாட்கள் இவ்விடந்தங்கி தஞ்சை தேசிய வித்யாசாலையில் மாணவர்களுக்கு அரிய பிரசங்கங்கள் செய்வார்.

* *

இந்நகரில் ஆகஸ்டுமாதம் 1ந்தேதி நமது இந்துமகமதிய சகோதரர்கள் கிலாபத்தினத்தைக் கொண்டாடப் போகிறார்களென்று அறிகின்றோம்.

* *

தஞ்சை ஸப்ஜெயிலிலிருந்து ஐந்துகைதிகள் தப்பி ஓடி விட்டார்களென்று அறிகிறோம். இவர்கள் ஓடியதற்குக் காரணம் தெரியவில்லை.

* *

இம்மாதம் 25ந்தேதி கனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கும்பகோணத்தில் "அரசியல் விஷயங்களில் கட்சி பேதங்கள்" என்பதைப் பற்றி ஓர் அரிய உபந்நியாசம் செய்தார். அவ்வூர் காங்கரஸ் கமிட்டியின் வைஸ்பிரஸிடெண்ட் மிஸ்டர் டி. கே. சிவராமய்யர் அக்கிராசனம் வகித்தார்.

* *

இம்மாதம் 21ந்தேதி கனம் ஸ்ரீநிவாச சாஸ்திரியார் நாகப்பட்டணம் சேர்ந்து மிதவாதிகளுக்கும் தேசியக் கட்சியினர்களுக்குள்ள வித்தியாசங்களைப்பற்றி ஒரு பிரசங்கம் செய்தார்.

* *

தஞ்சை ஜில்லா கிராம உத்தியோகஸ்தர்கள் இரண்டாவது மகாநாடும் பாபநாசம் தாலுக்கா கிராம உத்தியோகஸ்தர்கள் முதல்வருஷக்கொண்டாட்டமும் ஆகஸ்டுமாதம் 7ந்தேதி சனிக்கிழமை ஸ்ரீமான் எ. அரங்கசாமி ஐயங்கார் அக்கிராசனத்தின் கீழ் நடைபெறும்.

* *

ஆகஸ்டுமாதம் முதல் தேதி மாலையில் மகாமககுளத்தில் மேல் கரையிலுள்ள மிஸ்டர் ரங்கசாமிசெட்டியாரின் சத்திரத்தில் ஜில்லாவிலுள்ள கோர்ட் காபிஸ்டுகள் மகாநாடு ஒன்று நடைபெறும். அச்சமயம்அவர்களுடைய நிலைமை கவனிக்கப்பட்டு ஆலோசிக்கப்படும்.

* *

மன்னார்குடி தாலுக்கா போர்டு மீட்டிங்கு திருத்துறைப்பூண்டியில் நடைப்பெற்றது. 21 வது ஜில்லா போர்டு எலக்ஷனில் மன்னார்குடி மிஸ்டர் பாலகுருசாமி உடையாரும் மிஸ்டர் கே. ஸ்ரீநிவாசய்யரும் அபேட்சகர்களாக நின்றார்கள் மிஸ்டர் உடையார் தெரிந்தெடுக்கப்பட்டார்.

* *

சீர்காழி சுயஆட்சி சங்க ஆதாவில் ஆகஸ்டுமாதம் முதல் தேதியில் ஒற்றுமையாமை விரதம் அனுஷ்டிப்பதற்கு ஏற்பாடுகளை ஆலோசிக்க ஒரு கூட்டம் கூடுமென்று தெரிகிறது.

* *

நாளது 1920ஞ ஆகஸ்டுமீ 1உ ஞாயிற்றுக்கிழமை காலை 7-30 மணிக்கு முஸ்லீம்களுக்கும், மற்றுமுள்ள இந்தியர்களுக்கும் ஏற்பட்டிருக்கும் நெருக்கடியான காலத்தை யோஜித்து மஹாத்மா காந்தியவர்களால் பிரரேபிக்கப்பட்டிருக்கும் "ஒற்றுமையாமை" என்னும் விஷயத்தைப்பற்றி தீர்மானங்கள் செய்ய வழுத்தூரில் ஒரு பொதுக் கூட்டம் கூடும். அப்பொழுது தஞ்சை ஸமரஸ போதினி பத்திராதிபர் ஸ்ரீமான் இ. சூரியநாராயணஅய்யர் அவர்கள் B.A., B.L. அக்கிராசனம் வகிப்பார்.

* *

நமது ஜில்லா போர்ட்டின் பிரிஸிடெண்டான ஸ்ரீமான் வி. கே. இராமானுஜசாரியார் அவர்கள் இம்மாதம் 24உ இவ்விடம் விஜயம் செய்தார்கள். பள்ளிக்கூடம், ஆசுபத்திரி, சந்தைப்பேட்டை முதலிய விடங்களைச் சுற்றிப்பார்த்துக் கொண்டு தாலுகா போர்டு மீட்டிங்குக்கும் போனார். சிப்பந்திகளுக்குச் சம்பளம் உயர்த்தும் விஷயமாயும், இவ்வூர்த் தண்ணீர்க் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும் விஷயமாயும் விசாரித்தறிந்தார். பிறகு தமிழ்ச் சங்க ஆதாவில் நடைபெற்று வரும் இலவச இராப்பள்ளிக் கூடத்தைப் பார்த்துக்கொண்டு மறுதினம் தஞ்சைக்குத் திரும்பினார்.

* *

இவ்வூர்த் தமிழ்ச் சங்கக் கைத்தொழில் சம்பந்தமாக ஸ்ரீமான் அமால்ஸாத் என்னும் நெசவு நிபுணர் இவ்வூருக்கு விஜயம் செய்து கைத்தறி நெசவை எந்தெந்த விதங்களில் நல்ல ஸ்திதிக்குக் கொண்டு வரலாம் என்னும் விஷயத்தைப்பற்றி வெகு சவிஸ்தாரமாக எடுத்துரைத்தார்.

* *

சம்பளக் குறைவால் இவ்வூர் ஆஸ்பத்திரி சிப்பந்திகள் இம்மாதம் 10உ யன்று வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். சம்பள உயர்த்தும் விஷயமாய்த் தாலூகா போர்டில் ஆலோசிக்கப்படும் என்று அதிகாரிகள் கூறவே, மறுதினம் வேலைக்கு வந்து விட்டார்கள்.

* *

அவர்களின் சம்பளம் வெகு நாளைக்குமுன் ஏற்படுத்தப் பட்டதென்றும், மற்ற விடங்களில் அதிகரிக்கப்பட்டிருந்து இவ்வூரில் மட்டும் அதே ஸ்திதியிலிருப்பதால் சிப்பந்திகள் இதுகாறும் வேலை நிறுத்தம் செய்யாமலிருப்பது. விந்தையேயென்றும் ஜில்லா மெடிகல் உத்தியோகஸ்தரான மேஜர் D. G. ராய் I. M. S. அவர்கள் இரண்டு மாதங்களுக்கு முன்பு எழுதியிருக்கிறார்.

* *

ரயில் வண்டிக் கஷ்டம் பொறுக்க முடியவில்லை. ஜில்லா போர்டாருக்கும் சக்தியில்லை.

* *

உள்நாடு.

டெல்லியில் பிரசுரமாகும் 'காங்கரஸ்' என்னும் பத்திரிகை பஞ்சாபுக்குள் நுழையக்கூடாதென்று பஞ்சாப் கவர்ன்மெண்டார் ஓர் உத்தரவு செய்திருக்கின்றனர்.

* *

இம்மாதம் 25ந்தேதி பங்களூரிலுள்ள பிர்ம்ம ஞான சங்கத்து மெம்பர்கள் சுமார் இரண்டு மாத காலமாய் பங்களூரில் வாசம் செய்யும் டாக்டர் எஸ். சுப்பிரமணிஐயருக்கு ஓர் உபசாரப்பத்திரம் வாசித்துக் கொடுத்தார்.

ஜன நோக்கம்.

தஞ்சையில் ஒரு காலேஜ்

ஐயா

நமது நகரில் பல வருஷங்களாக ஸெண்ட் பீடர்ஸ் காலேஜ் என்ற ஒரு கல்லூரியிலிருந்து வந்தது போதுமானபணமில்லாததினால் அக்காலேஜ் எடுக்கப்பட்டு விட்டது. இதற்குக் காரணமென்னவென்று நோக்கின் மன்னார்குடி கும்பகோணம் முதலியவிடங்களில் முதல் கிரேட் காலேஜ்களிருந்து வருவதினால் அவ்விடங்களில் சென்றே நமதுமாணவர்கள் கல்விகற்கின்றார்கள். நமது பிரமுகர்களுக்குத் தஞ்சை நகரில் ஒரு காலேஜ் ஸ்தாபிக்கும் பொருட்டுப் பிரயத்தனங்கள் செய்யவேண்டுமென்ற ஊக்கமேற்படவில்லை. ஆகிலும் நமது பிரமுகர்களில் பிரபல வக்கீலான மிஸ்டர் பி. ஆர். நடேச அய்யரும், இன்னும் மற்றகனவான்களும் இந்த விஷயத்தில் சிறிது ஊக்கங்கொண்டு ஒரு காலேஜை ஸ்தாபிக்கும் பொருட்டு டிஸ்டிரிக்ட் போர்ட்டிற்கு ஒரு மனு அனுப்பினார்கள்.

மஹாராஷ்டா அரசர்களினாலும் நாயக்வம்சத்தைச் சேர்ந்த அரசர்களினாலும் வித்யாதானத்திற்காக வைத்துள்ள ஐசுவரியம் நமது டிஸ்டிரிக்ட் போர்டார் பார்வையிலிருந்து வருகின்றது. இவ்வாறு மிக்க செல்வத்தை ஆண்டுவரும் போர்டானது ஒரு கல்லூரியை இந்நகரில் ஸ்தாபிக்கச் செய்வது அதன் முக்கியகடமையல்லவோ? சிறந்த கனவான்கள் அனுப்பிய மனுவை, காலேஜை ஸ்தாபிக்க போதுமான பணமில்லையென்று போர்டார் ரத்துசெய்து விட்டார்கள். பணமில்லையென்று சொல்லும் நமது டிஸ்டிரிக்ட் போர்டார் திருநெல்வேலி திருச்செந்தூர் ரெயில்போடுவதற்கு கடன் கொடுக்க அவருக்கு எங்கிருந்து பணம் வந்ததோ நமக்குப் புலப்படவில்லை? போர்டார் நமதுஜில்லா சௌகரியங்களைச் செய்துவிட்டல்லவோ, பிறகுகடன் கொடுக்கவேண்டும்? கல்லூரிஸ்தாபிக்கப் போதுமான பணமில்லையென்று சொல்வது வீண்பேச்சாகும். சிதம்பரத்தில் மிக்க தர்மசிந்தையுள்ள ஒரு கனவானின் முயற்சியால் ஏற்பட்டுள்ள ஸ்ரீமீனாட்சி காலேஜைப்போல், மிக்க செல்வத்தை ஆண்டுவரும் நமது டிஸ்டிரிக்ட் போர்டிற்கு நமது நகரில் ஓர் கல்லூரி ஸ்தாபிப்பது மிகவும் கடினமான காரியமோ? ஆகையால் அடுத்த டிஸ்டிரிக்ட் போர்ட் மீட்டிங்கில், நமது மெம்பர்கள் மற்றும் இவ்விஷயத்தைப் பற்றி தீர்க்கமாக ஆலோசித்துத் தஞ்சை நகரில் ஒரு கல்லூரி ஸ்தாபிக்கும் பொருட்டுப் பிரயத்தனங்கள் செய்வார்களாக. போதுமான பணமில்லையென்று சொல்லும் வீண்பேச்சு வேண்டாம்.

போது நலப்பிரியன்

தஞ்சாவூர் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கம்.

1920 ஆகஸ்டு மீ **1**உ தஞ்சையில் அவசர மீட்டிங்கு.

I. கி. மு. க்களுக்குச் சம்பள உயர்வு ஏற்படாததைப்பற்றி யோசித்தல்.

2. படி விஷயமாய் தயாரிக்கப்பட்டிருக்கிற மகஜரில் கையெழுத்திடுதல்.

3. கர்ணங்களுக்குக் கேட்டபடியில்லாமல் பாதி கொடுத்திருக்கும் சம்பள விஷயமாய் யோசனை செய்தல்.

4. கி. மு. க்களின் மதிப்பு விஷயமாய் ஆலோசனை செய்தல்.

எல்லா மெம்பர்களும் மீட்டிங்குக்கு அவசியம் வரவேணுமென்ற கோரப்படுகிறார்கள்.

வி. ஓ. எ. ஆபீஸ்
தஞ்சாவூர்
24—7—20. } வி. சுப்பையர்,
காரியதரிசி.

ஆயுர்வேத மூலிகைகள்.

ஐயா,

ஆயுர்வேத மூலிகைகளை வைத்துப் பயிராக்க ஒரு மாடல் தோட்டம் ஏற்படுத்த வேண்டுமென்று கனம் சிவராவ் சமீபத்தில் நடந்த சட்டசபைக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். இந்த முக்கியமான தீர்மானத்தைக் கவர்ன்மெண்டார் தள்ளிவிட்டனர். மூலிகைகளை வைத்துப் பயிராக்குவதற்குக் கனம் ஸர்ஜன் ஜெனரல் ஆதரவளிக்கவில்லை. பிரிட்டிஷ் மருந்து வியாபாரிகள் மருந்துச் செடிகளை வைத்துப் பயிராக்குவதுபோல் இந்திய மருந்து வியாபாரிகளும் செய்தல் நலமென்றும், எல்லா மூலிகைகளும் ஒரே விடத்தில் பயிராகாதென்றும் அவைகள் வளருவது சீதோஷ்ண நிலையைப் பொருத்ததென்றும் கூறித் தீர்மானத்தை எதிர்த்துப்பேசினார். கவர்ன்மெண்ட் மெம்பர்கள் ஜனங்களுக்கு உபயோகமுண்டாகும் தீர்மானத்தை எதிர்ப்பது ஸகஜமாயிருப்பதால் அதைப்பற்றி நான் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால் கனம் சிவக்ஞானம் பிள்ளை என்பவர் இத்தீர்மானத்தைப்பற்றிவாதம் செய்வது காலத்தை வீணாக்குவதாகுமென்று கூறியது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. ஜனங்களுடைய நன்மையை நாடிப் பேசுவதாகச் சட்டசபையில் உட்கார்ந்திருக்கும் மிஸ்டர் பிள்ளை ஜனங்களுக்கு நன்மையைக் கொடுக்கும்படியான தீர்மானத்தை எதிர்த்துப் பேசியது கண்டிக்கத்தக்கது. மதுரை திருநெல்வேலி ஜில்லா வோட்டர்கள் இவர்இவ்விஷயத்தில் ஜாக்கிரதையாயிருக்கவேண்டும். இந்தத்தீர்மானத்தை விட வேறு முக்கியமான தீர்மானமொன்றுமில்லையென்று கூறலாம். கண்மூடித்தனமாக அதிகாரிகள்அடிக்கும் மேளத்திற்குச் சரியாக அங்கத்தினர்கள் தாளம் போடுவதை இனிஜனங்கள் அறியாமலிரார்கள். மேனாடுகளிலிருந்து அநியாய விலைக்கு இந்தியாவில் மருந்துச் சரக்குகள் இறக்குமதி செய்யப்பட்டு அந்நிய வியாபாரிகள் கொள்ளைலாபம சம்பாதித்துக்கொண்டு போவது மிஸ்டர் பிள்ளைக்குச் சம்மதம் போலும்! இம்மாகாணத்தில் மருந்துச் சரக்குகள் பயிரிடப்பட்டால் வியாபாரிகளுக்கும் லாபமுண்டு. ஜனங்களும் குறைந்த விலையில் மருந்துகளைப் பெற்றுச் சுகமடைவார்களென்பதை மிஸ்டர் சிவக்ஞானம் பிள்ளை ஏனோ அறியவில்லை?

ஒரு தமிழ் வைத்தியர்.

எதிரொலிகள்.

தேசபக்தர்கள் கவனிக்க.

ஜனங்கள் தங்கள் ராஜ்ய லட்சியங்களை அடையப்போராடும் காலத்தில் அவர்களுக்குப் பல கஷ்டங்களும் கொடுமைகளும் ஏற்படுவது ஸகஜம். அவ்வப்போது அக்கஷ்டங்களையும் கொடுமைகளையும் ராஜ்ய லட்சியங்களின் ஏணிப்படிகளாகப் பாவித்து ஜனங்கள் தாங்கள் கோரி நிற்பவைகளை அடைய மேலேறிச் செல்வது தான் புருஷலட்சணம். (திலகர்பெருமான் இதற்கு அத்தாட்சி.)

* *

ஒரு ஜனத்தலைவர் அநேக காரியங்களில் பிரவேசித்து அவைகளெல்லாவற்றையும்சரிவரச்செய்து விடலாமென்று நினைப்பது பைத்தியக்காரத்தனம். ஒரு தலைவர் ஒரு துறையில் சிறப்பாகக் கவலை செலுத்தித் தேசத்துக்கு உழைத்து ஜனங்களை முன்னேற்றி வைப்பது தான் உத்தமம்.

ஜெனோபன்.

* *

நீ மனம் பதைபதைக்காதே. நீ எப்பொழுதும் போல் கள்ளங்கபடின்றியும் சூதுவாதுமின்றியும் சரிவர தேசத்தொண்டு செய்; உனக்கு யாரேனும் தீங்குசெய்தால் அதுபற்றிக் கவலைப்படாதே. அவன் தனக்குத் தானே தீங்கு செய்துகொள்ளுகிறான்:—ஆரடல்ஸ்.

* *

எந்த மதத்தினரேனும் சரி, எந்தக் கொள்கையரேனும் சரி; எந்த வகுப்பினரேனும் சரி; அவர்கள் வித்தியாசங்களின்றித் தேசத்தொண்டு செய்தால் அவர்களை எல்லோரும் போற்றவேண்டும். ஒருகால் ஆத்ம ஞானத்தைப் பெற்றிருந்தால், அவர்களெல்லோரும் பேசுவது ஒரே பாஷை; பாடுவது ஒரேகானம்; நிற்பதுஒரேநிலை. மார்க்ஸ் அரீலியஸ். (இதற்கு உதாரணம் காந்தியின் சத்தியாக்கிரகமாகும்.)

* *

நீ என்னவோ ஆயிரம் வருஷம் வாழ்ந்திருப்பவன் போல் தேசசேவை செய்யலாமென்று காலத்தை வீண் போக்காதே; மரணம் எந்தக்ஷணமோ? ஆகையால் நீ சாகுமுன் உன் சக்திக்கியன்றளவு ஊழியம் செய். இல்லாவிடில் நீ தேசத்துக்கு வெறும் பாரமாயிருந்தாயென்று உன் சந்ததியார் பழி சுமத்துவார்கள்:— மார்க்கஸ் அரீலியஸ்.

* *

தேசபக்தர்கள் உண்மையாகத் தேச ஊழியம் செய்யுங்கால் கஷ்ட நஷ்டங்கள் சம்பவிக்கலாம். பொதுவாக எது சம்பவிக்கின்றதோ அது நியாயமாகச் சம்பவிக்கிறதென்று மனதில்கொள்ளவேண்டும். அவர் நுட்பமாய் கவனித்துப்பார்ப்பாயானால், இந்த உண்மை புலப்படும்.

உலகப்போக்கு.

காப்டின் எஸ். துரைசாமி ஐ. எம். எஸ். என்பவர் இம்மாதம் 24ந்தேதி பங்களூரில் இறந்துவிட்டனர். இவர் ஐ. எம். எஸ். பரீட்சையில் 1913ம் வருஷம் தேறியவர். பலயுத்த அரங்கஆஸ்பத்திரிகளில் உத்தியோகம் பெற்று நற்பெயரெடுத்தவர். 1919ம் வருஷம் இந்தியாவுக்குத் திரும்பிவந்து பங்களூர் ஆஸ்பத்திரியில் உத்தியோகம் வகித்து வந்தார். இறக்கும்போது இவருக்குவயது 33- இவர் சென்னை ஸ்ரீமதி ஆர். எஸ். சுப்புலட்சுமி அம்மாளின்சகோதரர். இவர் மூன்று பெண்களையும் பெண்ஜாதியையும் விட்டகன்றனர்.

* *

மிதுனபுரியில் வெள்ளமுண்டாகி சுமார்100 குடும்பங்கள் குடியிருக்க வீடின்றியிருக்கின்றன. திக்கற்றவர்களுக்கு உதவி செய்யப்பட்டு வருகிறது.

* *

கிழக்காப்பிரிக்கா இந்தியர்களின் டெபுடேஷனர் இம்மாதம் 23ந்தேதி இராஜப்பிரதிநிதியைப் பேட்டி கண்டு பேசினர். மற்ற ஜாதியினர்களுக்கிருப்பது போல் இந்தியர்களுக்கும் கிழக்காப்பிரிக்காவிலும் மற்ற கிரௌன் குடியேற்ற நாடுகளிலும் சமசுதந்தரமும் அந்தஸ்தும் கொடுக்கப்படுவதற்குத் தாம் முயற்சி செய்வதாக வாக்களித்திருக்கிறார்.

* *

சென்னை ஹிந்துப் பத்திரிகாசிரியர் மிஸ்டர் எஸ். கஸ்தூரிரங்கய்யங்கார் தாம் இளவரசர் வரவேற்பு கமிட்டியின் அங்கத்தினர்பதவியிலிருந்து விலகிக்கொண்டு விட்டதாக லார்ட் வில்லிங்டனுக்கு ஒரு கடிதம் எழுதியுள்ளார்.

* *

பாம்பாயில் டிரேடு யூனியன் காங்கரஸ் ஆகஸ்டுமாதம் 22, 23, 24-ந்தேதிகளில்கூடும். லாலா லஜபதிராய் அக்கிராசனம் வகிப்பர்.

* *

டெல்லியில் கவர்ன்மெண்ட் அச்சுக் கூடத்தில் வேலை நிறுத்தம் செய்த தொழிலாளர்கள் இன்னும் வேலைக்குத் திரும்பவில்லை. கவர்ன்மெண்டார் வேலை நிறுத்தம் செய்தோர்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்திருக்கின்றனர்.

* *

சென்னை லிபரல் சங்கத்தினர், லார்ட்ஸ் சபையில் டயர்செய்த செயல்கள் சரியென்று வாதம் செய்யப்பட்டதைப் பற்றி வருந்துவதாகவும் இந்தியாவில் நிறத்துவேஷமும் பிரிட்டிஷாரிடத்தில் நம்பிக்கை குறைவும் ஏற்படுமென்பதாகவும் மந்திரி சபைக்கு ஒரு தந்தியடித்திருக்கிறார்கள்.

* *

இம்மாதம் 25ந்தேதி சென்னைத் தபால் சேவகர்களின் கூட்டமொன்று கூடி ஆகஸ்டு மாதம் 5ந்தேதிக்குள் தங்களுடைய கோரிக்கைகள் திருப்தி செய்யப்படாமற் போனால் பெரிய அனர்த்தமுண்டாகுமென்று ஒரு தீர்மானம் செய்து இந்தியா கவர்ன்மெண்டாருக்கு அனுப்பியிருகிறார்கள்.

* *

மெஸர்ஸ் மகாத்மா காந்தியும் மௌலானா ஷௌக்குத் தலியும் வட இந்தியாவில் பல பாகங்களில் பிரசங்க யாத்திரை செய்து ஒத்துழையாமையைப் பற்றி உபந்நியாசம் செய்து வருகிறார்கள்.

* *

பம்பாயிலுள்ள மூல்ஜி ஜீதாமார்க்கெட் சென்ற வியாழக்கிழமை தீக்கிரையாகிச் சுமார் 1000 கடைகள் எரிந்து போய் விட்டன. சுமார் 4½ கோடிக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்குமென்று மதிப்பிடப்படுகிறது. கராச்சியிலும் சாக்கு மண்டிகள் எரிந்து விட்டன. நஷ்டம் இரண்டரை லட்சமிருக்குமென்று சொல்லப்படுகிறது.

* *

வங்காளத்தைச் சேர்ந்த கட்டாக் ஜில்லாவிலுள்ள ஜினப்பூருக்குச் சமீபத்தில் பிராமணி என்னும் நதியில் வெள்ளப் பெருக்கெடுத்துப் பதினைந்து கிராமங்கள் முழுகிப் போய்விட்டன. 1500 பேர் வீடின்றித் தவிக்கிறார்கள். அதிகாரிகள் திக்கற்றவர்களுக்குப் பணஉதவி செய்து வருகிறார்கள்.

* *

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்ஸரின் மனைவியார் சில தினங்களுக்கு முன்பு கல்கத்தாவில் இறந்து விட்டாரென்று ஒரு செய்தி கூறுகிறது.

தஞ்சை ஜில்லா கான்பரன்சும் உபாத்தியாயர்களும்

1920ளு ஆகஸ்டு மீ 7, 8உ களில் பாபநாசத்தில் தஞ்சைஜில்லா கான்பரன்சு கூடும். அதில் நம் எலிமெண்டரி ஸ்கூல் மாஸ்டர்களின் குறைகளைப்பற்றிப்பேசவேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கீழ்க்கண்ட இரண்டு தீர்மானங்கள் மகா-௱-ஸ்ரீ காரியதரிசி அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன. இத்தீர்மானங்கள் விஷய ஆலோசனைக் கமிட்டியார் முன்பு யோஜனைக்கு விடப்படுமென்பதாய் 17-7-20 உல் கடிதம் கிடைத்திருக்கிறது. நாம் எல்லோரும் அந்தக் காலத்தில் பாபநாசம் போய் நம் குறைகளைத் தலைவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளவேண்டும். அத்தீர்மானங்களாவன:—

1. போர்டு முனிசிபல் ஸ்கூல்களுக்குச் சம்பளக் கமிட்டியார் சிபார்சுப்படி மாதம் 30 ரூபாவுக்குக் குறையாமல் சம்பள மளித்தல்.

2. எய்டெட் எலிமெண்டரி ஸ்கூல்களுக்குப் போதனா முறையில்லாதார்களுக்கு வருஷம் 120 ரூபாய்க்குக் குறையாமலும், போதனா முறையில் பயின்றோருக்கு 180, ரூ 230, ரூ 300 வீதம் தாராவாரியாய் கிராண்டு கொடுத்தல்.

இந்த ஜில்லாவில் மொத்தம் சற்றேறக்குறைய 2,993 உபாத்தியாயர்கள் தற்காலம் சம்பளம் போதாமல் கஷ்டப்படுகிறார்கள். இந்தக்கான்பரன்சில் இத்தனை பேருக்காக நமது ஜில்லாவாசிகள் வந்திருந்து ஷை குறைகளை நிவர்த்திக்க முன்வர வேண்டுமாய்ப் பிரார்த்திக்கிறோம்.

நிற்க, 1920ளு ஆகஸ்டு மாதம் 7உ பாபநாசத்தில் நமது ஜில்லாவின் பல பாகங்களிலுமுள்ள உபாத்திமைச்சங்கங்களை இணைத்துஜில்லா சங்கம் ஸ்தாபிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எல்லாச் சங்கக் காரியதரிசிகளும், உபாத்தியாயர்களும் ஆஜராகி ஜில்லா சங்கம் ஸ்தாபிக்க உதவிசெய்ய வேணுமாய்க் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஷை விஷயமாய் யோஜனைகள் நன்றியறிதலுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

காரியதரிசி
உபாத்திமை சங்கம்
நீடாமங்கலம்.

தஞ்சை ஜில்லா கான்பரன்ஸ் பாபநாசம்

காரியதரிசி அறிவிக்கிறார்:—

1. ஜில்லாவின் பல பாகங்களிலிருந்தும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிற தற்கிணங்கி ரிஸெப்ஷன் கமிட்டியார் கான்பரன்ஸ் ஆகஸ்டு 7, 8, 9 ந்தேதிகளில் நடைபெறுகிறதென்று தீர்மானித்திருக்கிறார்கள்.

2. கான்பரன்ஸ் பந்தல் வேலை முடிவடைந்து விட்டது. பிரதிநிதிகளுக்கு விடுதிகளும் தயாராய்க்கொண்டு வருகின்றன.

3. கான்பரன்ஸ் கமிட்டி மெம்பரிடமிருந்து ரூ 5 க்குக் குறையாமலும் பிரதிநிதியிடம் ரூ 2 சந்தாவும் வசூல் செய்யப்படும்.

4. போஜன வசதிகள் தனித்தனியே ஏற்பாடு செய்யப்படுகின்றன. அதற்காகப் பிரத்தியேகமாய் யாதொன்றும் வசூல் செய்யப்பட மாட்டாது.

5. கான்பரன்ஸில் கொண்டுவர வேண்டிய தீர்மானங்களை முந்தியே தெரிவிக்க வேண்டும்.

6. பிரதிநிதிகள் தங்கள் படுக்கை மட்டில் கொண்டு வருவது உசிதமாகும். பிரதிநிதிகள் வந்து தங்கும் தேதி ரெயில் இவைகளைக் குறிப்பிட்டு எழுதினால் வாலண்டியர்கள் வந்து அழைப்பார்கள்.

7. ரிஸெப்ஷன் கமிட்டி ஆகஸ்டு முதல் தேதி கூடி மற்ற வேலைகளைக் கவனிக்கும்.

தஞ்சாவூர் தாலூகா கிராம உத்தியோகஸ்தர்கள் சங்கத்தின் வருஷாந்திரக் கொண்டாட்டம்

---

1. அதில் எல்லா ஜாதியினர்களுக்கும் சாப்பாடு வசதி தனித்தனியே செய்ய ஏற்பாடு நடந்து கொண்டு வருகிறது.

2. அன்று மாஸவிருந்துக் கச்சேரி ஒன்று நடைபெறும்.

3. அன்றிரவு கிராம உத்தியோகஸ்தர்களுடைய நாடகம் ஒன்று சிறப்பாய் நடக்க ஏற்பாடு நடந்துகொண்டு வருகிறது.

4. வருஷ முடிவு வரையில் நடந்திருக்கிற நடவடிக்கைகள் பரிசீலனை செய்யப்படும்.

5. இது விஷயமாய் வேண்டிய விபரம் தெரிந்துகொள்ளவிருக்கும் அபேக்ஷகர்கள் காரியதரிசிக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

6. இதைச் சிறப்பாய் நடத்த சில முக்கியஸ்தர்கள் முன் வந்திருக்கிறார்கள்.

24—7—20 }
பூதலூர் }

V. சுப்பய்யர்,
காரியதரிசி.

நூல் நூற்கும் ராட்டினத்தின் சங்கீதம்.

இந்திய ஸ்திரீகள் கவனிக்க

மகாத்மா காந்தி அவர்கள் "யங் இந்தியா" பத்திரிகையில் மேற்குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதுகிறார்.

இந்தியாவின் பழையகால இயந்திரமாகிய நூல் நூற்கும் ராட்டினத்தின் சங்கீத ஓசை நமது ஜன சமூக வாழ்க்கையில் ஊடுருவிச் செல்லத் தலைப்பட்டிருக்கிறது. இந்தியாவின் இராணிகளும் மகா ராணிகளும் நமது இந்திய ஜன சமூகத்திற்கு நூல் நூற்காத வரையிலும், ராஜாக்களும் மகா ராஜாக்களும் கைத்தறி பக்கம் உட்கார்ந்து ஜன சமூகத்திற்குத் துணி நெசவு நெய்யாத வரையிலும் தாம் திருப்தியடையப் போவதில்லையென்று பண்டிதர் மதன் மோகன் மாளவ்வியா அவர்கள் கூறியிருக்கிறார்கள். அரங்கஸீப் சக்கரவர்த்தி தமது தலைப்பாகையைத் தாமே நெய்துக் கொண்டது ராஜாக்களுக்கும் மகா ராஜாக்களுக்கும் ஒரு வழிகாட்டியாக விருக்கிறது. மகா சக்கிரவர்த்தியாகிய கபீர் தாமே நெசவு வேலை செய்தார். அவர் தமது கலைஞானத்தைத் தாம் செய்த பாடல்களில் புகுத்திருக்கிறார். ஐரோப்பா சாத்தான் வலைக்கு அகப்படுவதற்கு முன்பு அதன் இராணிகள் தாமே நெசவுத்தொழில் செய்து அதைச் சிரேஷ்டமாகக் கருதி வந்தார்கள். இதை நிரூபிக்க இன்னும் பல உதாரணங்களிருக்கின்றன. நமது புண்ணிய பூமியாகிய இத்தேசத்தில் ராஜவம்சத்தினர்களை இந்தப் பரிசுத்தமான தொழிலைச் செய்யும்படி பண்டிதர் மாளவ்வியா அவர்களுக்குச் சொல்லி திருபட்டும் சண்டை செய்து போராடுவதனால் மாத்திரம் இந்தியா தன் பூர்வீகநிலையை அடைந்து சுபிட்சமாகவும் ஸ்வயாதீனமாகவும் இருக்கமுடியாது. பிறகு இந்தியா எதனால் தன் பூர்வீக நிலையை அடையும்? ஒவ்வொரு வீட்டிலும் ஸ்திரீகள் நூல் நூற்கும் ராட்டினத்தை வாங்கவேண்டும். நூல்நூற்பதினால் இந்தியா தன்பழையநிலையை அடையமுடியும். நூல் நூற்கும் ராட்டினம் ஹார்மோனியத்தைக் காட்டிலும் இனிமையாகவும் லாபகரமாகவும் இருக்கிறது.

ஸ்ரீமதிசாரளாதேவியின் வேலை.

பண்டிட்மதன்மோகன்மாளவியா அவர்கள் நூல்நூற்கும் தொழிலை இந்திய ராஜாக்கள் கைப்பற்றவேண்டுமென்று சொல்லி வருவது ஒருபுறத்திலிருக்க, ஸ்ரீமதிசாரளா தேவி சௌத்ராணி அவர்கள் இந்த இயக்கத்தில் தம் உயிரையும் உடலையும் தியாகம் செய்து உழைத்துவருகிறார். ஸ்ரீமதி சாரளா தேவியினிடமிருந்தும், பிறரிடமிருந்தும் வந்தசெய்திகளைக்கொண்டு கவனித்துப்பார்த்தால் சுதேசியத்தில் அவருக்கு (ஸ்ரீமதி சாரளதேவி) ஒரேமோகமாகப் போய்விட்டதென்று தெரிகிறது. ஸ்ரீமதி சாரளா தேவிக்கு மஸ்லின்களில் மோகமில்லை. அவருக்கு அவைகள் பிடிக்கவில்லை. அருங்கோடையிலும் அவருக்கு மோட்டா (ஒருவிதமாக ரெட்டு நூலில்செய்த புடவை) புடவைகள் போதுமென்று திருப்தியுடனிருக்கிறார். அவர் பிரசங்கம் செய்வதைக்காட்டிலும் அவரது மோட்டா புடவை உண்மையான சுசியத்தை உபதேசிக்கிறது. அவர் அமிர்தசரஸ், லூதியானா முதலியவிடங்களில் பிரசங்கங்கள்புரிந்து பொதுஜனங்களின் ஆதரவைப்பெற்றுவருகிறார். இத்துடன் அவரால் அமிர்தசரஸில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நூல்நூற்கும் கமிட்டிக்கு மிஸஸ் ரததின சந்திரன், புக்கா, சவுத்ரி, ரத்னதேவி முதலிய ஸ்தீரீரத்னங்கள் மெம்பர்களாகச் சேர்ந்து வேலைசெய்துவருகிறார்கள். கடைசியாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் ரத்னதேவி என்னும் மாது ஜலியன்வாலா படுகொலை சென்றவருஷம் ஏப்ரல் 13 ந்தேதி நேர்ந்தபொழுது, இரவுமுழுதும் செத்துக்கிடந்த பிணக்குவியல்களமத்தியிலும் இறக்கும்தருவாயிலிருந்தவர்களின் நடுவிலும் தம் புருஷனைதேடிச்சென்று கடைசியாகக் கண்டுபிடித்து அவரது தலையை தம்மடிமீது வைத்து அவரது தேகத்தை நாய்நரிகள் பிடுங்காவண்ணம் காவல்புரிந்தவரென்பதை இதைப்படிப்போர்கள் உணரவேண்டும். இந்த அம்மாளுக்கும் இன்னும் மற்ற மாதுசிரோன்மணிகளுக்கும் என் மனமார்ந்த வந்தனத்தை செலுத்துகிறேன். இந்தஸ்திரீதேவிகள் நூல்நூற்கும் சங்கீதத்திலும் தாங்கள் தேசசேவை செய்கிறோமென்ற எண்ணத்திலும் மன ஆறுதல் கொள்ளட்டும். அமிர்தசரஸிலிருக்கும்மற்ற ஸதிரீகளும் ஸ்ரீமதி சாரளாதேவி சௌத்ராணிக்கு உதவிசெய்வார் என்று நம்புகிறேன். அமிர்தசரஸ் புருஷர்களும் இவ்விஷயத்தில் தாக்கள் செய்யவேண்டிய கடமையைச் செய்வார்களென்றும் எதிர்பார்க்கிறேன்.

பம்பாய் ஸ்திரீகள் என்னசெய்கிறார்கள்?

பம்பாய்ப் பிரமுகர்களின் மனைவிமார்கள் இந்தப் பரிசுத்தமான தொழிலைக் கைக்கொள்ள ஆரம்பித்துவிட்டார்களென்பதை இதைப்படிப்போர்கள் முன்னமே அறிவார்கள். இப்போது டாக்டர் மிஸ்ஸ மணிக்பாய் பகதூர் ஜி என்னம்மாது இத்தொழிலை கற்றுக்கொண்டு சேவசாதனம் என்னும் ஸ்திரீகளின் ஆசிரமத்திலுள்ள மற்ற ஸ்திரிகளுக்குக் கற்றுக்கொடுக்க முயற்சிசெய்துவருகிறார். ஜான்ஜிரா சமஸ்தான ராணியாரும் அவரது சகோதரியாரும் இந்தத்தொழிலைக் கற்றுக்கொண்டுவருகிறார்கள். இந்த ஸ்திரீமணிகள் தாங்கள்கற்றுக்கொண்டதற்குப் பிறகு தக்களாலானவரையில் நூல்நூற்று உதவுவார்களென்று நம்புகிறேன். சில நண்பர்கள் இந்த இயக்கத்தைக்கண்டு சிரிப்பார்களென்பதை நானறிவேன். மில்களும் தையற் இயந்திரங்களும் டைப்ரைட்டர்களுமுள்ள இந்நாளில் ஒரு பைத்தியக்காரன் தான் இந்தமாதிரியாக பழையகால நூல்நூற்கும் ராட்டினத்தைக் கொண்டுநெசவுத்தொழிலை உத்தாரணம்செய்யமுற்படுவான் என்று என்நண்பர்கள் சொல்லுவார்கள். இவர்கள் தையல இயந்திரங்கள்வந்தபிறகு ஜனங்கள் ஊசியைவிடவில்லையென்பதையும் டைப்ரைட்டர் பரவிவரும் இக்காலத்திலும் கையால்எழுதுவதுபோய்விடவில்லையென்பதையும் மறந்துவிட்டார்கள். ஹோட்டல்கள் ஏற்பட்டபிறகு வீட்டுச்சமயல்கள் நின்றுவிடவில்லை. அதுபோல நூல்நூற்கும் ராட்டினமிருந்தால் மோசமொன்றும்வந்துவிடாது. டைப்ரைட்டர்களும் தையல்மெஷின்களும் நாட்டைவிட்டுப்போனாலும் போய்விடலாம். ஊசியும் பேனாவும் நாட்டைவிட்டு அகன்றுவிடாது. மில்கள் நாசமடைந்துவிடும்; நூல்நூற்கும் ராட்டினம்இந்தியாவுக்கு அவசியமாகும். இந்த இயக்கத்தைகண்டு பரிகாசம் செய்வோர்கள் நூல்நூற்கும் ஏழைக்குடும்பங்களைப்பார்க்கட்டும். அவர்கள் தங்கள் வருவாயுடன் இத்தொழிலினால் லாபம்பெற்றுச்சுகமடைந்து வருகிறார்களா? என்பதை அவ்வீட்டார்களைக் கேட்கட்டும். பிறகு அவர்கள் பரிகாசம் செய்யலாம்.

இந்தியாவுக்கு நல்லகாலம்.

இன்னும் கொஞ்ச நாளில் இந்தியாவுக்கு மிஸ்டர் ரீவாசங்கர்ஜக ஜீவன் என்பவரின் முயற்சியால் புதிய முறையில் செய்யப்பட்ட ஒரு நல்ல நூல்நூற்கும் ராட்டினம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இது சாதாரணமாகச் செய்யப்பட்டிருக்கிறது. இதில் நஷ்டமொன்றுமில்லை. இதன் விலையும் மிகவும் குறைவு. வேண்டுமானால் இதைச் சீர்திருத்தி அமைத்துக் கொள்ளலாம். இதனின்றும் அதிகநூல் நூற்கலாம். ஐந்து வயது சிறுவர்களும் சிறுமிகளும் மிகவும் சுலபமாக இதில் வேலை செய்யலாம். இந்தப் புதிய இயந்திரம் உபயோகமாயிருந்தாலும் இராவிட்டாலும் இந்தியாவின் பொருளாதார முன்னேற்றத்திற்குக் கையால் நூல் நூற்பதும் கைநெசவு நெய்வதும் அவசியமாகும். விவசாயத்தோடு இந்தத் துறையிலும் கிராமவாசிகளுக்குக் கொஞ்சம் வருவாயிருக்க வேண்டும். பல வருஷங்களுக்கு முன்பு நூல் நூற்கும் தொழில் இந்தியாவின் வீட்டுத்தொழிலாக விருந்தது. லட்சக்கணக்கான ஜனங்கள் பட்டினிகிடப்பதினின்றும் காப்பாற்றபட வேண்டுமானால் ஒவ்வொருவீட்டிலும் நூல் நூற்கும் ராட்டின மிருக்கவேண்டும். ஒவ்வொரு கிராமம் நெசவுக்காரர்களை முற்காலம்போல், உடைத்தாயிருக்க வேண்டும்.

ஒரு முக்கிய பிரசங்கம்.

இம்மாதம் 24 ந்தேதி பல்லாரி ஜில்லா 4-வதுமகாநாடு ஹாஸ்பேட்டையில்கூடியபோது திவான் ஸி. பி. மாதவராவ் அவர்கள் அக்கிராசனம் வகித்துச் செய்த பிரசங்கத்தின் சாராம்சத்தை அடுத்தவாரம் பிரசுரிப்போம்.

என்ன நீங்கள் பார்த்திருக்கிறீர்களா?

நான் ஸ்திரீ புருஷர்களின் உயிரைக்காக்கும் கைவல்ய நவநீதம். வாழ்க்கையின் சுகம், காதலபெருக்கு, பரவச முதிர்ச்சி முதலானதுகளை ஊட்டுகிறவன்.

„ ஸ்திரீ புருஷ லக்ஷணங்களையும், சரீர கோட்பாடுகளையும் விவரித்துக் கூறுபவன்.

அதனால்தான்

சகலதேச வாலிபர்களும், ஸ்திரீகளும், புருஷர்களும் என்னை விரும்புகிறார்கள்,

நான்தான்

ஆநந்தமகிளா.

படங்களுடன் கூடியவன் விலை ரூ 1-0-0

சொற்ப பிரதிகளே கைவசமுள. தாமதிக்காமல் இன்றே எழுதுங்கள்.

விலாஸம்:—

பி. எஸ், ராய். புதுவை.

உலக அரசியல் நிலை

தீர்க்கதரிசி எழுதுகிறார்

இந்த வாரத்தில் கிடைத்த அந்நிய நாட்டுச் செய்திகளைப் பார்த்தால் ஐரோப்பா நிலை தடுமாறியிருக்கிறதென்றே கூறவேண்டும். லார்ட்ஸ் சபையில் ஜெனரல் டயரின் செயலைப் பற்றிப் பிரமாதமான வாதம் நடந்தது. யுத்தகாலத்தில் ஜெர்மானியர்கள் பல்ஜியத்திலும் பிரான்ஸிலும் நகரங்களைத் தகர்த்ததும், ஆகாயத்தினின்று குண்டு களெறிந்ததும கிராமங்களைக் கொளுத்தியதும் அநாகரிகமென்றும் யுத்த முறையல்ல வென்றும் சொல்லிவந்த பிரிட்டிஷார் சமாதான காலத்தில் (யுத்தகாலத்தில் அல்லவென்பதைக் கவனிக்கவும்) ராஜவிசுவாசமுள்ள இந்திய ஜனங்கள் மீது பஞ்சாபில் ஆகாயத்தினின்று குண்டு களெறிந்ததையும் நிராயுதமாணின்றுகளைச் சுட்டுக்கொன்னவயோதிகர்களை பல அவமானங்களுக்கு உட்படுத்தியதையும் ஆதரிக்க முற்பட்டு விட்டார்கள். ஆனால், பிரிட்டிஷாரில் நல்லவர்களில்லை யென்றும அவர் பஞ்சாப் படுகொலை செயலைக் கண்டிக்கவில்லை யென்றும் நான் சொல்லத் துணியேன். பொதுவாகப் பிரிட்டிஷாரின் மனப்போக்கு ஜெனரல் டயர் செய்த செயல் சரியென்று சொல்லக்கூடியதாயிருக்கிறது. இந்தியர்கள் என்ன செய்ய முடியும்? இதனின்று இந்தியர்கள் அறிந்து கொள்ள வேண்டிய தொன்றுண்டு. அதாவது பிரிட்டிஷாரின் மனோபாவம் தங்களுடைய க்ஷேமத்தைப் பாதுகாக்கஎன்ன வழிகளுண்டோ அவ்வந்தவழிகளில் செல்லக்கூடியதா யிருக்கிற தென்பதாகும். அப்போது சுதந்தரம் சமத்துவம் சகோதரத் துவமென்ற பேச்சுக்கள் பிரிட்டிஷாரின் மனதை விட்டு அகன்றுவிடுமென்று தெரிகிறது.

அயர்லாந்து

அயர்லாந்து தேசசரித்திரத்தில் ஒரு நெருக்கடியான நிலை ஏற்பட்டிருக்கிற தென்று இந்த வாரம் வெளி வந்த செய்திகளால் அறிகிறேன். ஸின் பீனகர்ள் என்னும் ஒரு கட்சிக்காரர்கள் அயர்லாந்தில் குடியரசு ஸ்தாபிக்க வேண்டுமென்றுபகிரத முயற்சிகள் செய்து வருகிறார்கள். பொழுது விடிந்தால் கொலையும் களவும் கணக்கில்லாதபடி நேரிடுகின்றன. பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் போலீசாரோடும் இராணுவத் தாரோடும் ஸின் பீனர்கள் மீதுயுத்தம் நடத்த ஆரம்பித்து விட்டார்கள். ஸின்பீனர்கள் தங்களுக்கென்று போஸ்டாபீசும்நியாயஸ்தலங்களும் போலீஸ் படையும், இராணுவப் படையும்ஏராளமாக ஏற்படுத்திக் கொண்டு அயர்லாந்தில் அமளிசெய்கிறார்கள். அயர்லாந்தின் தற்காலநிலைக்குக் காரணம் பிரிட்டிஷாரின் அடக்குமுறை ஆட்சியென்று பிரிட்டிஷார்களில்பலர் சொல்லுகிறார்கள். சமீபத்தில் பெல்பாஸ்டுஎன்னுமிடத்தில்பெரிய கலகமேற்பட்டு ஸின்பீனர்கள் பக்கத்திலும் யூனியனிஸ்டு கட்சியிலும் பலர் இறந்தனர். அநேக காயம்பட்டு ஆஸ்பத்திரிக்குத் தூக்கிக்கொண்டுபோகப் பட்டிருக்கின்றனர். அயர் லாந்தில் ரோமன் காதலிக் மதத்தினர்களுக்கும் பிராடஸ்டாண்ட் மதத்தினர்களுக்கும் யுத்தமுண்டாகுமென்று தெரிவதாக டைம்ஸ் பத்திரி எழுதுகிறது. அடுத்த வாரத்திற்குள் இன்னும் என்னென்ன சம்பவங்கள் நேரிடுமோ? தெரியவில்லை.

ஸிரியா

இத்தேசத்தின் மீது பிரஞ்சுக்காரர்கள் படையெடுத்துச் சென்று பல நகரங்களைக் கைப்பற்றி வருகிறார்கள். காரணம் இத்தேச ஆட்சி முறையின் ஜவாப்தாரித் தவத்தைத்தான் ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று பிரான்ஸ் வற்புறுத்துகிறது. ஸிரியா நாட்டரசனான எமீர்பைசல் பிரஞ்சுக் காரரோடு எதிர்த்து யுத்தம் செய்கிறார். அங்கிருந்து வெளியாகும் செய்திகளினின்று பிரஞ்சுக்காரர்களுக்கு ஜயம் உண்டாவதாகச் சொல்லப்படுகிறது.

துருக்கி

இன்று வரையில் கிடைத்த செய்திகளினால் துருக்கிய பிரதிநிதிகள் சமாதான உடன்படிக்கையில் கையெழுத்திட பாரிஸ் நகர் நோக்கிப் புறப்பட்டு விட்டார்களென்று தெரிகிறது.

ஆப்கானிஸ்தான்

ஏப்ரல் மாதம் முதல் ஆப்கன் பிரதிநிதிகளுக்கும். இந்தியா கவர்ன்மெண்டின் பிரதிநிதிகளுக்கும் நடந்து வந்த உடன்படிக்கை சம்பாஷணை முடிவடைந்து ஆப்கன் பிரதிநிதிகள் தங்கள் நாடு சென்று விட்டார்களென்று தெரிகிறது. இந்த இரண்டு தேசப் பிரதிநிதிகளும் ஆறுவிஷயங்களைப்பற்றி யோசித்தார்கள். (1) கிலாபத் சம்பந்தமான விஷயம், (2) எல்லைப் புறஜாதியினரின் தொல்லை (3) ஆப்கானிஸ்தானின் அந்தஸ்து (4) வியாபார போக்குவரவு சம்பந்தம் (5) ஆப்கானிஸ்தான் அபிவிருத்திக்குப் பிரிட்டிஷார் உதவி செய்தல் (6) இருதிறத்தினர்களிடமிருந்த அவநம்புதல் முதலிய ஆறு விஷயங்கள் விரிவாகவும் திருப்திகரமாகவும் ஆலோசிக்கப் பட்டனவென்று ஒரு தந்திச் செய்திகூறுகிறது. இன்னும் சீக்கிரத்தில் சமாதான உடன் படிக்கை ஏற்பட்டு இரு தேசங்களுக்கும் சிநேகபாவம் அதிகரிக்க வேண்டுமென்பது இந்தியர்களுடைய பிரார்த்தனை.

சர்வதேசச் சங்கம்

சர்வதேசச் சங்கம் நல்ல பயனைக் கொடுக்குமென்றும், அதை எல்லாத்தேச கவர்ன்மெண்டார்களும் ஆதரிக்க வேண்டுமென்றும் அமெரிக்கா அதில் தலையிடாது தனித்திருப்பது பெரிய குறையென்றும் விசனித்துலார்ட்ஸ்சபையில்கர்ஸன் பிரபுபேசினார். அமெரிக்கா ஏன் சர்வதேசச்சங்கத்தில்தலையிடாது தனித்திருக்கிறது? காரணம் என்ன? நேசக்கட்சியார்கள் அமெரிக்கா அச்சங்கத்தினின்றும் விலகிக் கொள்ளும்படி என்ன காரியங்கள் செய்தார்கள்? சர்வதேசச் சங்கத்தின் கொள்கைகளின் பிரகாரம் நேசக்கட்சியார் நடக்கிறார்களா? அதன் முக்கிய நோக்கப்படி உலகத்தில் சமாதானம் நிலைவியிருக்கிறதா? சமாதானம எங்கும் பரவுவதற்கு நேசக்கட்சியர்கள் என்ன முயற்சிகள் எடுத்துக் கொண்டார்கள்? இவை போன்ற கேள்விகளுக்கு லார்ட் கர்ஸன் என்ன சொல்லுவரோ? ஆனால் உலக நிலையைக் கவனித்து வருபவர்களுக்குச் சர்வதேசச் சங்கநோக்கத்திற்கு விரோதமாகவே எல்லாத் தேசங்களிலும் காரியங்கள் நடைபெறுகின்றன வென்பது தெளிவாக விருக்கிறது.

மெஸபொடேமியா.

மெஸபொடேமியாவின் ஆட்சிக்குப் பிரிட்டிஷார் ஜவாப்தாரியாகவிருக்க வேண்டுமென்று மெஸபொடேமியர்கள் கூறுவதாக எங்கும் பறைசாற்றப்பட்டது. பார்லிமெண்டிலும் இங்ஙனமே மந்திரிகளால் கூறப்பட்டது. மெஸபொடேமியர்களுடையக்ஷேமம் தங்களுடையதென்று அறிவிக்கப்பட்டதை எல்லோரும்நம்பியிருக்க, கல்னல் டி. இ. லாரன்ஸ் என்பவர் லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு ஒரு வியாசமெழுதி அதில் மெஸபொடேமியர்கள் முதன முதல் பிரிட்டிஷார் குடியேற்ற நாட்டு அரசாட்சி முறையை ஏற்படுத்துவர்களென்று நம்பியிருந்ததாகவும் இப்போது அவர்கள் அந்த நம்பிக்கையை இழந்துவிட்டார்களென்றும் குறிப்பிட்டிருக்கிறார். இதற்குக் காரணமென்னவாயிருக்கலாம்? மெஸபொடேமியர்களில் ஒருவர்கூட பிரிட்டிஷ் ஆட்சி முறையை விரும்பவில்லையாம் மிஸ்டர் லாரன்ஸ் மெஸபொடேமியாவில் ஆட்சி முறையயின் நோக்கம் உடனே மாற்றப்பட்டு அராபிப் பாஷையைக் கவர்ன்மெண்ட் பாஷையாகச் செய்யப்பட வேண்டுமென்று வற்புறுத்துகிறார். அவர் இன்னும் என்ன சொல்லுகிறார்? அராபியர்களைக் கொண்டே மெஸபொடேமியாவில் சமாதானத்தை நிலைநிறுத்தவேண்டுமென்று சொல்லுகிறார். பிரிடிஷ் இந்தியத் துருப்புகளை அங்கிருந்து காலி செய்யவேண்டுமென்று சொல்லுகிறார் மிஸ்டர் லாரன்ஸ் கூறுவது உண்மையாயிருக்கலாம் மிஸ்டர் லாயிட்ஜார்ஜ் என்ன சொன்னாலும், அவர் மெஸபொடேமியாகவின் மன நிலையை அறியவில்லையென்று தெரிகிறது. மெஸபொடேமியாவின் ஆட்சிப்பொறுப்பைப் பிரிட்டிஷார் தாங்கள் வகிக்கவேண்டுமென்று விரும்பினாலும் அப்பொறுப்பிலுள்ள கஷ்டங்களை அலட்சியம் செய்தல் கூடாது.

போல்ஷிவிக்கர்கள்.

போல்ஷிவிக்கர்கள் பெர்ஷியா, துருக்கி, ஸிரியா முதலியவிடங்களில் தங்களுடைய முயற்சிகளைச்செய்து வருகிறார்கள். போலந்தின் மீது படையெடுத்து அந்நாட்டைச் சரணமடையும்படி செய்துவிட்டார்கள். ருஷ்யாவில் உள்நாட்டுக்கலகம் வலுத்திருப்பதால், அங்கும் போல்ஷிவிக்கர்களே செல்வாக்கு பெற்றிருக்கிறார்கள்.

சீனாவில் கலகம்.

சீனாவிலிருந்து செய்திகள் விவரமாகக்கிடைக்காததால், அந்த நாட்டின் போக்கைத் தெளிவாகக்கூறமுடியவில்லை. அடுத்த வாரத்திற்குள் ஏதேனும் விவரமான செய்திகள் வெளிவருகின்றனவா என்பதைப் பார்ப்போம். ——

ஆண்டன் வழங்கியதீர்ப்பை ஐகோர்ட்டு நியாயாதிபர் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டனர். ஆனால் குற்றவிசாரணை விவாதம் நடந்து வந்தது நியாயவதிகாரி கிளமெண்ட்ஸ் என்போர் திலகர் பொய்ச்சத்தியக் குற்றஞ்செய்ததாகத் தீர்மானித்துப பதினெட்டு மாதங் கடுங்காவல் விதித்தார். திலகர் சுயநலங் கருதாதவரெனவும் பிடிவாதத்தினாலும பதவியடையுமாசையினாலும் இக்குற்றத்திற்குள்ளானாரெனவும் கிளமெண்ட்ஸ் தமது முடிவுரையில் கூறினர்.

ஹாகஸ் எனும் நீதிபதி, திலகர் பெருமான் கெட்டெண்ணமில்லாதவரென்றும் பரிசுத்தமான நோக்கமுடையோரென்றும் அபிப்பிராயப்பட்டுப் பதினெட்டு மாதக்காவலை யாறுமாதத் தண்டனையாக மாற்றினார். கடைசியாய் 1904-ம் வருஷம் மார்ச்சு மாதம் நான்காம்நாள் திலகர் நிராபராதியென்றும் அநியாயமாய்ப் பொய்க்குற்றஞ்சாட்டப்பட்டனரென்றும் பொய்ச்சத்தியஞ் செய்தவரல்லரென்றும் அவர் சொல்லியது யாவுமுண்மையென்றும் ஐகோர்ட்டு நியாயாதிபதிகள் முடிவுக்குவந்துத் திலகரை மிகுந்த கௌரவத்துடன விடுதலை செய்தார்கள். கள்ளச்சத்தியக் குற்றம் பொய்யென்று மேலதிகாரிகள் தண்டனையை நீக்கியவுடன் அதிகாரவர்க்கத்தினர் அவமானமடைந்து திலகர் மேற்சாட்டியிருந்த இதர அபவாதங்களைத் தொடராது பின் வாங்கினார்கள். திலகர் பின்னும் தமது மாசற்ற தன்மைக்கு யாதொரு குறைவின்றியும் பரிசுத்தக்குணத்திற்குப் பங்கமின்றியும் தப்பி வெளிவந்தார்.

பாபாமஹாராஜா எழுதிவைத்த மரணசாதனம் நியாயமென்றும் திலகர், கபர்தே போன்றவர்கள் சட்டப்படி தர்மகர்த்தராயிருக்க வதிகாரமுடையோரென்றும் சுவீகார முண்மை யென்றும் பூனா நீதியரால் தீர்மானிக்கப்பட்டது. அத்தீர்ப்பையழிக்குமாறு, தாய்மஹாராஜா ஐகோர்ட்டுக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டாள். நாராயண சந்திரவர்க்கரெனுமதிகாரி கீழ்க்கோர்ட்டு தீர்ப்பைமாற்றித் திலகர் சரிவர நடந்துகொள்ளவில்லையென்று அபிப்பிராயங்கூறித் தாய்மஹாராஜாவுக்குச் சாதகமாய் முடிவு செய்தார் அந்த முடிவு பிசகென்றும் சுவீகாரம் நியாயமென்றும் வழங்குவதற்காகத் திலகர்பெருமான் நீதிமன்றங்களுக்கெல்லாம் உயர்ந்தோங்கிய பிரிவி கவுன்சிலுக்கு மனுச்செய்பலானார். பிரிவி கவுன்சில் தலைமை வகித்த லார்ட்ஷாவேனும் பெரியோர் திலகரை வெகுவாகப் புகழ்ந்து அவர் உத்தமமானகுணமுடையோரெனவும் நாராயணசந்திரவர்க்கர் அவரைப்பற்றிக்கூறியுள்ளதில் அணுவளவு முண்மையில்லையெனவும் சுவீகாரம் ஒழுங்காய் நடைபெற்றதெனவும் திலகர் எவ்வித கெட்டகாரியமுஞ் செய்யவில்லையெனவும் தீர்ப்பெழுதினார்.

நேயர்காள்! எத்தன்மைய இடுக்கணினின்றும் திலகர் தப்பிவந்தனரென்பதைச் சற்று உற்றுநோக்குங்கள். இவ்வளவு மனக்கவலைகளுக்கிடையே, திலகர் நெஞ்சந்தளராது, மனவமைதிகுன்றாது, ஆநந்தங் குறையாது, வாழ்ந்தனரெனில் இவரது பெருந்தன்மைக்கெல்லையுண்டோ! இவ்வழக்கு காலத்தில் திலகர் தன் மூத்தகுமாரனையிழந்தும் சற்றேனுங் கலக்கமடைந்திருப்பரோ! ஆர்டிக்ஹோமென்ற நூலை பெழுதிய காலமுமிதுவேயென்பதை ஞாபகத்தில் வையுங்கள்! ஆகா! ஏழுகடல் பொங்கினாலும் மலைகள் திரண்டுவந்தாலும் கலங்கா மனமுடைய திலகரன்றோ உண்மையான கர்மயோகி! திலகரன்றோ லோகமான்யர்!

திருவனந்தபுரம்,
26—7—20.

ஆர். கணேசன்.

மதிப்புரை

"ஏப்ரல் 1919"

அல்லது

பஞ்சாப் படுகொலை

இப்பெயர் கொண்ட புத்தகத்தை நமது பார்வைக்கு அனுப்பிய ஸ்ரீமானுக்கு வந்தனம். இதை எழுதியவர் தேசபக்தன் உதவியாசிரியரான ஸ்ரீமான் வெங்களத்தூர் சாமிநாதசர்மா அவர்கள் இவ்வரிய புத்தகத்திற்குத் "தேசபக்தன்" ஆசிரியர் ஸ்ரீமான் திரு. வி. கலியாண சுந்தரமுதலியார் அவர்கள் ஒரு விசேஷ முகவுரை எழுதியிக்கிறார்கள். இந்த விசேஷ முகவுரையை ஒவ்வொருதமிழரும் உற்றுவாசிக்கும் படி வற்புறுத்துகிறோம். இதைமுற்றிலும் படிப்போர்கள் ஊக்கமும் உருக்கமும் அடைவார்களென்பது திண்ணம் இதன் ஆசிரியர் ஸ்ரீமான்வெ. சாமிநாதசர்மா ஸர். மைகல் ஓட் வியரின் ஆட்சிமுறையையும் ஜெனரல் டயரின் கொடுஞ்செயல்களையும் கர்னல்ஜான்ஸன் போன்ற சில்லரை உத்தியோகஸ்தர்களின் சிறுமைச் செயல்களையும் சென்றவருடம் நடந்த பஞ்சாப் சம்பவங்களையும் கோவையாவும் தெளிவாகவும் விளக்கமாகவும் எழுதியுள்ளார். இதுபட்சபாதமின்றி நடு நிலையினின்று எழுதப்பட்டிருப்பதால், இதைப்படிப்பவர்கள் தங்களுடையமனநிலைக்குத் தக்கவாறு அபிப்பிராயம் கொண்டு அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சி முறை எத்தன்மையுடைய தென்பதை எளிதில் அறிந்து கொள்வார்கள். இப்புஸ்தகத்தில் ஐந்து அத்யாயங்கள் அடங்கியிருக்கின்றன. பஞ்சால நாடு, பஞ்சாபின் ஆட்சிமுறை, ரௌலட் சட்டமும் சத்தியாக்கிரகமும் பஞ்சாப் மாகாணமும் இராணுவச் சட்டமும், சில கோரமான சாட்சியங்கள் மேற் குறிப்பிட்ட ஐந்து அத்யாயங்களில் விவகரிக்கப் பட்டிருக்கின்றன. இதில் ஜலியன்வாலாப்பக்கில் கொலையுண்ட மதன்மோகன் என்பவனின் படமும் ஜலியன் வாலாபாக் படமும் லாகூரில் சவுக்கடி தண்டனைக்காட்சியும் காசூரில் சந்தேகத்தின் பேரில் கைதி செய்யப்பட்டவர்களுடைய படங்களும் பார்த்து பரிதபிக்கத் தக்கவையாகும். காகித விலை உயர்ந்திருக்கு மிந்நாளில் நல்ல காகிதத்தில் அச்சடிக்கப்பட்டு 240 பக்கங்கள் கொண்ட புஸ்தகம் விலை ரூபா 2—0, இதை வேண்டுவோர் மயிலாப்பூர் எம். கல்யா அண்டுசன்ஸ் கம்பெனிக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

ராஜ புத்திர ரத்தினம்

இஃதொரு சரித்திரத் தமிழ் கதை காலஞ்சென்ற பி. ஏ பிரணதார்த்தி ஹாசிவனார் பி. ஏ. எல் டி. அவர்கள்குமாரன்ஸ்ரீ பி. இராமச்சந்திரன்என்பவரால் இயற்றப்பட்டு வி. கோ சூரியநாராயண சாஸ்திரியார் பி. ஏ. அவர்கள் குமாரன் வி. சூ. நடராஜன் என்பவரால் இது பதிப்பிக்கப்பட்டது. சுருக்கமாக இக்கதைஅழகான எளிய தமிழ் நடையில் சிறுவர்கள்சிறுமிகள் படிக்குமாறு எழுதப்பட்டிருக்கிறது. இது போன்ற பல புத்தகங்கள் எளிய தமிழ்நடையில் வெளிவந்தால் தமிழுலகத்துக்கு மிகவும் உதவியாயிருக்கும். இதன் ஆசிரியரும் இதைப்பதிப்பித்தவரும் நம் யோசனையைக் கவனிப்பார்களாக. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஸ்ரீமான் வி சூ சுவாமிநாதன் 735 சாக்காத் தோப்பு தெரு, மதுரை என்ற விலாசத்துக்கு எழுதவும்.

சென்னைத் தொழிலாளர் சங்க 2-வது ஆண்டுவிழாவின் வைபவசிந்து

இது சேலம் வித்வான் ஸ்ரீமான் சு. அர்த்தநாரீசவர்மா அவர்களால் இயற்றப்பட்டுச்சென்னை ,,வன்னிகுலமித்திரன்'' பத்திராதிபர் ஸ்ரீமான் ஆ. சுப்பிரமணியநாயகரவர்களால்வெளியிடப்பட்டது. இதன் விலை அணா ஒன்று. ஸ்ரீமான் வர்மாவைத்தமிழ் மக்கள்நன்கறிவார்கள். இவரதுகவிகள் படித்தால் அவைகளிலுள்ள ஆழ்ந்தகருத்தை யுணர்ந்து அபாரமான தேசபக்தியை அடையலாம். தொழிலாளர் இயக்கத்திற்கு அவசியமாயுள்ள இச்சிறுபுத்தகத்தை ஸ்ரீமான் வர்மா அவர்கள் இயற்றி வெளியிட்டுள்ளார்கள். இப்புஸ்தகத்தை எல்லோரும் வாங்கிப்படித்து நலம்பெறுவார்களாக. வேண்டுவோர் ஆ. சுப்பிரமணிய நாயக்கர் "வன்னிகுல மித்திரன்" பத்திராதிபர், பிரம்பூர் பாரக்ஸ், என்ற விலாசத்துக்கு எழுதிப்பெற்றுக் கொள்ளலாம்,

தீலகவதி

இஃதோர் நல்லதமிழ் நாவல். பல நாவல்களை இயற்றிய சகோதரி வி. பாலம்மாள் எழுதிவெளியிட்டிருக்கிறார். இதன் நடைஎளிதாக விருப்பதோடு கதையின் போக்கு வெகு ஸ்வாரஸ்யமாயிருக்கிறது. இதன் விலை ரூ 1-4-0நல்ல பளபளப்புள்ள கடிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. வேண்டுவோர் சகோதரி வி. பாலம்மாள் விவேகாசிரமம், இராயபேட்டை என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்

எந்த அரசாங்கத்தில் ஜனங்கள் தைரியவான்களாகவும், நியாயமுடையவர்களாகவும், உண்மை பேசுபவர்களாகவும் மானிட இரக்கம் கொண்டுள்ளவர்களாகவுமிருக்கிறார்களோ அந்த அரசாங்கம் என்றும் நிலை நிற்கும். எந்த அரசாங்கத்தில் ஜனங்கள் கோழைத்தனமுள்ளவர்களாகவும் இரக்கமின்றியிருப்பவர்கலாகவும் துன்மார்க்கர்களாகவும், அடிமைகளாகவுமிருக்கிறார்களோ அந்த அரசாங்கம் எப்போதும் நிலைத்திராது.

கலியுகத்தில் ஒரு மகானின் மகிமை

ஒரு நிருபர் எழுதுகிறார்

கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையத்தில் பிரபல கண்டிராக்டரும் வ்யாபாரியுமான ஸ்ரீமான் எஸ். எ. கந்தசாமிபிள்ளைக்குஒருமகத்வமுள்ளமகானால்ஓர் அருமையானமூலிகையும்மகிமையுள்ளதாயத்தும் கிடைத்தன..அதனால் மூலம், க்ஷயக்குஷ்டம் முதலிய வியாதிகளும் இன்னும் நாள்பட்ட எந்த வியாதிகளும் குணமடைந்து விடுகின்றன. தீராத மனக்கவலையும் ஒழிந்து போகிறது. குழந்தையில்லாதவர்களுக்குப் புத்திர பாக்யமுண்டாகிறது. குன்னூர் தாசில்தார் மிஸ்டர் கே. லட்சுமணய்யருக்கு ஒரு குழந்தை பிறந்து அதற்குப்பிறகு பத்து வருஷங்கள் குழந்தைகளில்லாமலிருந்தன. தாசில்தார் அவர்கள் ஸ்ரீமான் பிள்ளையின் கியாதியைக்கேட்டு அவரிடமிருந்துமூலிகை பெற்றுக்கொண்டு அதை உபயோகிக்கும் விதத்தையும் அறிந்து கொண்டார். மூலிகையின் விசேஷத்தால் தாசில்தார் அவர்களுக்கு ஓர் ஆண்குழந்தை பிறந்து இப்போது சௌக்கியமாயிருக்கிறது. ஸ்ரீமான் பிள்ளையின் மகத்துவத்தை எல்லோரும் கொண்டாடுகிறார்கள். சென்ற வாரம் தாசில்தார் மிஸ்டர் லட்சுமண ஐயர், ஸ்ரீமான் பிள்ளையவர்களை வரவழைத்து உபசரித்தார்.

மற்றொரு மகிமை

கோடை காலத்தை உத்தேசித்து ஸ்ரீமான் பிள்ளை குன்னூரில் வாசம் செய்து கொண்டிருந்தார். அது சமயம் சுப்பிரமணியன் என்ற ஒருவர் சித்தப்பிரமையுடன் உட்கார்ந்து உட்கார்ந்தபடியே அன்னம் ஆகாரமின்றியிருந்தார். இவ்விஷயம் ஸ்ரீமான் பிள்ளையவர்களுக்குத் தெரியவரவே மூலிகையைக் கொண்டு அவரைக் குணப்படுத்திவிட்டார். ஜனங்களெல்லோரும் ஆச்சரியமடைந்தார்கள். அநேகர் ஸ்ரீமான் பிள்ளையிடம் வைத்திய உதவி பெற்றுவருகிறார்கள்.

வறுமைகொடிது; ஒவவொரு தேசத்துஜனங்களிலும் ஒரு பாகத்தினர் வறுமையால் வருந்துகிறார்கள். ஆனால் ஒரு தேச முழுமையும் வறுமைக்கடலில் மூழ்கியிருந்தால் அது கரை சேர அதன் மக்கள் உழைக்கவேண்டும்:-தீமோகினிஸ்.

*　　*

மனிதனுக்கு ஆபத்துக்கள் உண்டாவது சகஜமே, இக்காலங்களில் மன முடைந்து தயங்கித் தவிப்பது பேதமை. நல்லகாலம் வருமென்று மனதைத் தேற்றிக் கொள்ளவேண்டும்.

ஹோமர்.

*　　*

தேசபக்தர்களே! ஜனங்கள் உங்களைப் புகழவேண்டுமென்கிற எண்ணத்துடன் நீங்கள் பற்பல வேலைகளில் நுழைந்தீர்களானால், உங்களுக்கு எப்போதும் ஆபத்திருக்கிற தென்பதை அறியுங்கள். ஜனங்கள் கைகொட்டுகிறார்களென்று நினைத்து உண்மைக்கு விரோதமானவைகளைப் பிரசங்கங்களில் பேசிவிடாதேயுங்கள். படித்த அறிவுள்ளவர்கள் உங்களை மதிக்கமாட்டார்கள்.

பிளேட்டோ.

கிரயமில்லாமல் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மஹானின் மூலிகையும், தாயத்தும் கிடைக்கும்.

சகோதரர்களே! சகோதரிகளே!!

உலக பிரசித்தி பெற்ற அருமையான மூலிகையும், மகிமையுள்ள தாயத்தும் மகத்வமுள்ள மஹானால் எனக்கு கிடைத்து அதனால் உலகிலுள்ள அநேக ஜனங்கள் தீராதென்றெண்ணியதும், நாள் பட்டதுமான குஷ்டம், க்ஷயம், மூலம் முதல் சகலவிதமான வியாதிகளும் பலவிதமான கஷ்டங்களும் கவலைகளும் நீங்கி சகல சவுக்கியத்துடனிருப்பவர்களையும்.

நீண்ட நாளாக புத்திர பாக்கிய மில்லாதவர்களும், கர்ப்பம் உண்டாகி உண்டாகி வீணானவர்களும், அவரவர்கள் மனம்போல் குழந்தை உண்டாகி சந்தோஷத்துடனிருப்பவர்களையும் இப்போதே இந்த நிமிஷமே நேரில் பார்க்கலாம்.

நற்சாக்ஷி கடிதங்களாலும் காணலாம். பிரபலமான பேப்பர்களிலெல்லாம் அடிக்கடி ஆச்சரியமாகும்படியான சந்தோஷ சங்கதிகளைப் பார்த்திருப்பீர்கள்.

கலியுகத்தில் மஹானின் மகிமை விளங்குகிறது.நாளுக்கு நாள் தூண்டாமணி தீபச் செய்து வருகிறது.

எந்த மதஸ்தர்களும் உபயோகிக்கத் தக்க மூலிகையும், தாயத்தும் அமைந்திருக்கிறது. 3 நாள் மூலிகையின் கிரயம் ரூ. 2—0—0 விகிதம் வியாதிகளுக்கு தக்கபடி எத்தனை நாள் மூலிகை தேவையாகுமோ அதுபோல் கூடும் தொகைக்கு வி. பி. பி,-யில் அனுப்பி வருகிறோமென்பதும் தாயத்து 1க்கு ரூ. 2 விகிதம் கொடுத்து வருகிறோமென்பதும் ஏழை ஜனங்களுக்கு கிரயமில்லாமல் கொடுத்துவருவதோடு சாப்பாடும் போட்டு செலவுக்கும் உதவி வருகிறோமென்பதும் ஏற்கெனவே தெரிந்த விஷயம்.

ஏழை முதல் பிரபுக்கள் வரை பொது ஜன நன்மைக்காக தற்காலம் சகல ஜனங்களும் சந்தோஷத்தை யடையவும், பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாகவும் ஒவ்வொரு குடும்பத்தார்களும் இதற்குப் போஷகராக வேண்டுமென்று கருதி இருப்பதால்

நாளது ஜூலை மீ 31-ந் தேதிக்குள் ஒவ்வொரு குடும்பத்தார்களும் அடியிற் கண்ட விலாசத்திற்கு மூன்று ரூபா மணியார்டர் செய்தனுப்பி தங்கள் பெயரை நமது ரிஜிஸ்டரில் தாக்கல் செய்து கொண்டு ஒவ்வொரு மாதமும் 10 தேதிக்குள் ரூ மூன்று விகிதமே 12 மாதங்களுக்கு மாத்திரம் மணியார்டர் மூலமாக தவறாமல் அனுப்பி வர வேண்டியது.

12 மாதங்களுக்கு மேல் அனுப்பவேண்டியதில்லை. இவ்விதம் அனுப்புவோருக்கும் அவர்கள் குடும்பத்தோர்களுக்கும் எந்தவிதமான வியாதிகள் இருந்தாலும இனி ஏற்பட்டாலும் எந்த சமயத்தில் எழுதினாலும் நாம் உடனுக்குடனே அதற்கு வேண்டிய மூலிகையோ தாயத்தோ அவைகளை வேண்டியதுபோல் உடனே அனுப்பி வைப்போம்.

மஹானுடைய கிருபையால் உடனே குணமாகும். இந்தப்பட்டி ஜீவியகாலம் வரை வேண்டியதை குடும்பம் பூறாவுக்கும் கொடுத்து வரக்கூடும்.

இந்த மாதம் ரூபா மூன்றும் வந்ததும் அப்போதே போஷகராக ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொண்டு ஒவ்வொருவருக்கும் தேவையானதை அது முதற்கொண்டே அனுப்பக்கூடும்.

எந்த விதமான வியாதியுள்ளவர்களானாலும், பலவித கஷ்டங்கள் உள்ளவர்களானாலும் எதற்காக தேவை யிருந்தபோதிலும் அது விவரங்களை ஆரம்பமுதல் சரிவர விவரமாக எழுதி நாம் கொடுக்கும் ஜீவிய கால ரிஜிஸ்டர் நம்பரை குறிப்பிட்டு ஒவ்வொரு கடிதங்களிலும் தங்கள் விலாசங்களை தெளிவாக தெரிவித்து வர வேண்டியது.

ஒவ்வொரு போஷகர்களுக்கும் இவ்வருஷம் நாம் அச்சிட்டிருக்கிற வியாதிகளின் விவரம், குறிப்பு, முக்கிய குறிப்பு, புதிய நற்சாக்ஷிகள் முதல் சகல விவரமும் கண்ட "பால சந்திரன் காலண்டர்" என்னும் புக்கும் 2 கலரில் 3 வருஷத்தியகாலண்டரும் அனுப்பி வைப்பதுடன்.

புதிதாக ஒவ்வொரு வருஷமும் அச்சிடும் புக்கும் காலண்டரும் இடையில் அப்போதைக்கப்போது அச்சிடும் துண்டு நோட்டீசுகளும் 'பாலசந்திரன்' அனுபந்தங்களும் அப்போதைக் கப்போது அனுப்பி வைக்கக்கூடும்.

ஒவ்வொருவரும் போஷகராக முன் வருவதோடு கூட தங்கள் சிநேகிதர்களுக்கும் பொது ஜனங்களுக்கும் இதன் நன்மைகளை விவரமாகச் சொல்லி தங்களால் இயன்ற வரையில் போஷகராக இதில் சேர்த்துவைத்து பொதுஜன உபகாரத்தைச் செய்வதே பெருத்த நன்மையாகும்.

வேண்டியவர்கள் நாளது ஜூலை மீ க்குள் அடியிற்கண்ட விலாசத்திற்கு ரூ. 3 அனுப்பி தங்கள் பெயர்களை ரிஜிஸ்டரில் பதிவு செய்து கொள்ளலாம்.

எஸ். எ. கே. பிள்ளை,
மேட்டுப்பாளையம், கோயமுத்தூர் ஜில்லா, சவுத் இந்தியா

---

10 வருஷத்திற்கு பின் ஆண் குழந்தை ஜனனம்
சென்ற வாரம் கனம் குன்னூர் தாசில்தாரவர்களால் கிடைத்த கடிதம்

ம-ா-ா-ஸ்ரீ எஸ். ஏ. கே பிள்ளை அவர்களுக்கு,
மெர்ச்சண்ட் அண்ட் கன்ராக்டர், மேட்டுப்பாளையம்.

ம-ா-ா-ஸ்ரீ மேட்டுப்பாளையம் எஸ். எ. கந்தசாமி பிள்ளை அவர்களுக்கு அன்புடன் எழுதிக்கொள்வது, எனது பெண்குழந்தைக்கு சுமார் 10 வயதாகிற தென்றும் அதற்கும் பின் குழந்தை பிறக்கவில்லை என்றும், நான் தங்களிடம் சொல்லிக் கொண்டதில் எனக்கு தாங்கள் தங்களுக்கு மஹானால கிடைத்திருக்கிற மூலிகையும் கொடுத்து உபயோகிக்கும் விவரமும் சொல்லி ஆண் குழந்தையே பிறக்குமென்றும் சொல்லியிருந்தீர்கள். அது போலவே நாம் உபயோகித்து வந்தோம். மஹானின் கிருபையால் இன்றைய தினம் விடியற்காலம் ஆண் குழந்தை பிறந்திருக்கிறது. இச் சங்கதியை எனது மனபூர்வமான சந்தோஷத்துடன் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள
(Sd.) K. LAKSHMANAIAR,
தாசில்தார், குன்னூர்

Printed at the Vartakamitran Press and published by E. Suryanarayana Aiyar B. A., B. L., at 2109 Yeilaiamman koil Street, Tanjore.